www.tamilarangam.net

அன்பளிப்பு 20 p

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 31-01-1992

## இராணுவத்தினர் சாட்சியமளிக்கமறுப்பு

கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் படுகொலை சம்பந்தமான ஜனாதிபதி விசாரணைக்கமிசன் முன் சாட்சியமளிக்க இராணுவத்தினர் மறுத்துள்ளனர். 170 ற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு, 400 ற்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு, தென் தமிழீழத்தையே கலக்கிய இச்சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள 17 இராணுவத்தினரும், ஜனாதிபதி விசாரணைக்கமிசன் முன் சாட்சியமளிக்க மறுத்துவிட்டமை, இவ்விசாரணையைக் கேலிக்கூத்தாக்கி சிங்கள அரசின் கண் துடைப்பு நடவடிக்கையை உலகுக்கு பறைசாற்றியுள்ளது. ஏராளமான தமிழ் மக்கள் மனஉறுதியுடன் எதற்கும் அஞ்சாது இவ் விசாரணைக்கமிசன் முன் சாட்சியமளித்தனர். என்பது குறிப்பிடத்தக்கது.

# படை எடுப்பை முறியடிக்க உறுதி பூணுவோம்

## • மகேந்திரராஜா அறைகூவல் •

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

நாம் சமாதானக் கதவை அகலத் திறந்து வைத்தபடி இருக்கின்றோம். ஆனால், சிறீலங்கா அரசு போர்முரசைக் கொட்டிக்கொண்டேயிருக்கின்றது.

தற்போதைய நிலையில், சிறீலங்கா அரசிற்கு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் சுலபமானதொரு இராணுவ வெற்றிபற்றிய கனவில் இருக்கின்றார்கள்.

### இன்றைய சூழல்

இன்றைய சூழலில் சிறீலங்கா அரசின் அரசியல் நிலைப்பாடு என்னவென்றால், தொடர்ச்சியான முறையில் படிப்படியாக, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிமீது படையெடுப்பை நடாத்தி, கணிசமான நிலப்பகுதியைக் கைப்பற்றி, புலிகளையும் இராணுவ ரீதியாகப் பலமிழக்கச் செய்து- பணிய வைத்து அவர்களை பேச்சு வார்த்தை மேடைக்கு இழுத்து "தீர்வுகளைத் திணிப்பதுதான்" அவர்களின் நோக்கம்.

அதற்காகவே வடதமிழீழத்தின் மீது, குறிப்பாக யாழ் குடா நாட்டின் மீது ஒரு பாரிய படை எடுப்பொன்றை நடாத்தும் தாயாரிப்புக்களில் ஈடுபடுகின்றனர்.

புலிகள் பலமான நிலையில் இருக்கும்வரை சமாதானப் பேச்சுக்களை நடாத்தினால் அரைகுறை தீர்வுகளை அவர்கள் மீது திணிக்க முடியாது என்பது சிறீலங்கா அரசிற்கு நன்கு தெரியும்.

எனவேதான் புலிகளின் பலத்தை உடைக்க எதிரி எண்ணங்கொண்டிருக்கின்றான்.

புலிகளின் பலம் என்பது தமிழீழ மக்களின் தேசிய பலம்தான். அந்தத் தேசியபலத்தை அடித்தளமாகக்கொண்டு தான் எமது மக்களின் விடுதலைப் போராட்டம் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எனவே புலிகளின்பலம் சிதைக்கப்படுவதென்பது தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்படுவதற்கு ஒப்பானதாகும். சிங்கள இனவெறி இராணுவத்தின் கரங்களில் எமது மக்கள் சிக்குறுவதற்கு ஒப்பானதாகும்.

ஆகவே, எதிரியின் படையெடுப்பு முயற்சியை நாம் முறியடித்தேயாக வேண்டும்.

### வருமுன் காப்போம்

இப்போதிலிருந்தே எமது போராளிகள் சிங்கள அரசின் படையெடுப்பிற்கு முகங்கொடுக்கத் தயாராகி வருகின்றனர்.

குடாநாட்டின் மீது சிங்கள இராணுவம் படையெடுத்தால் இதுவரை நடந்த சமர்கள் எல்லாவற்றையும் விட அது மிகப்பெரும் சமராக நடக்கும்.

எனவே அதை வெற்றிகொள்ள நாமும் பெரியதொரு தயாரிப்பு முயற்சியில் உடனடியாகவே இறங்கவேண்டும்.

பாரிய தயாரிப்பு முயற்சி எனும்போது, அதை நடைமுறைப்படுத்த பெரியளவில் மனிதசக்தி தேவைப்படும். இதைத் தனிய புலிகளால் வழங்க முடியாது. மக்கள்தான் புலிகளாக மாறி அம்மனித சக்தியை ஈடுசெய்யவேண்டும்.

நடந்துமுடிந்த ஆனையிறவுச் சமரிலும், மணலாற்றுச் சமரிலும் மக்கள் வகித்தபங்கு எம்மை உற்சாகப்படுத்தி எமக்கு நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. அந்தச் சமர்களில் போர்க்கள வெளி வேலைகளை பெருமளவில் நிறைவேற்றியது மக்கள்தான் என்பதை பெருமையுடன் வரலாறு சொல்லும்.

அதேபோன்றதொரு மக்கள் பங்களிப்பை இனிவர இருக்கும் சமரும் எதிர்பார்த்து நிற்கின்றது.

இந்தச் சமரில் போர்க்களவேலைகளுடன் மக்களின் தற்பாதுகாப்பும் பின்னிப்பிணைந்து கிடக்கின்றது.

கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசி அழிவை ஏற்படுத்தி, வதந்திகளைப் பரப்பி மக்களைக் குழப்பமடையச் செய்து சமரில் தான் வெற்றிபெற எதிரி முயல்வான்.

### முற்காப்பும் கடமைகளும்

இதற்கு நாங்கள் இடங்கொடுக்காது மக்களை அணிதிரட்டி முன் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட வேண்டும். இதற்காக ஊர்கள்



தோறும் தொண்டர்படை உருவாகி வேலைகளை நிறைவேற்ற வேண்டும்.

* எல்லாவீடுகளிலும், பொது இடங்களிலும் திறந்த அகழிகளை அமைத்து குண்டு வீச்சுகளுக்கு பாதுகாப்பு தேடிக்கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

# " நன்னீர் சுற்றாடல் பாதுகாப்புக்கள் " யாழ் பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கு

தமிழீழ விடுதலைப்புலிகளின் வழிகாட்டல்களில் தமிழீழ மக்கள் சிறந்த சேவைகளை வழங்கத் தயாராக இருப்பது தமிழீழ அபிவிருத்தியின் வெற்றிக்கு நிச்சயம் வழிவகுக்கும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட "நன்னீர் சுற்றாடல் பாதுகாப்புகள்" கருத்தரங்கில் உரையாற்றிய தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு.மூர்த்தி குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கிற்கு யாழ் பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமை தாங்கினார். திரு.-மூர்த்தி தொடர்ந்து கூறுகையில் "ஆயுதமேந்திப் போராடுவது மட்டும்தான் விடுதலைப் போராட்டத்தின் பங்களிப்பு எனக்கருதக்கூடாது. தமிழீழத்தின் வளங்களைப் பாதுகாப்பதும், அவற்றிற்கான திட்டங்களை வகுப்பதும், அவற்றினை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதும் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய பங்களிப்பாகுமென்பதை மறந்துவிடக்கூடாது. துறைசார் வல்லுனர்கள் இவற்றிற்கான உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கிச் சாதனைகளை நிலைநாட்டி தமிழீழ அபிவிருத்திகளுக்கு உதவ வேண்டும்." எனத் தெரிவித்தார்.

### ஒவ்வொரு துளி நீரும் பாதுகாக்கப்பட வேண்டும்

பேராசிரியர் கணேசலிங்கம் தனது தலைமை உரையில் நன்னீர் பாதுகாப்பு இன்று மிக முக்கியமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு துளி நீரையும் நாம் நன்கு பயன்படுத்த வேண்டுமென்றும், நன்னீர் பாதுகாப்புக்கான பாரிய திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், நன்னீர் பாதுகாப்புப் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இக் கூட்டத்தில் பேராசிரியர் நவரத்தினராஜா, யாழ் மாநகர ஆணையாளர் திரு.எல்.பாலசிங்கம், உள்ளூராட்சி ஆணையாளர் திரு.எஸ்.டிவகலாரை, முன்னாள் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.-சிவஞானம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டத் தலைவர் வைத்திய கலாநிதி நச்சினார்கினியர், நீர்வளச் சபையைச் சேர்ந்த திரு.கே.யோகராசா, நவஉதயம் சிறீஸ்கந்தராஜா, புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதியைச் சேர்ந்த திருவாளர்கள் செல்வின், மயூரன் உட்பட இன்னும் பலர் கருத்துரைகளை வழங்கினர். தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் திரு.ரவிராஜ் நன்றியுரை வழங்கினார்.

# எச்சூழலிலும் கல்வி தொடரப்பட வேண்டும்

## -தலைவர் பிரபாகரன்-

யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்களும், கல்லூரி அதிபர்களும் நடாத்திய கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் "தேசிய விடுதலைப் போராட்டத்தில் எவ்வித நெருக்கடிகள் ஏற்பட்டாலும் நாம் எமது மாணவர் கல்வி அறிவு பெறுவதை உறுதி செய்ய வேண்டும். உச்சக்கட்ட போர் நடவடிக்கை வேளைகளிலும் கூட கல்வி கற்பித்தலைத் தொடர வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்.

# மேற்கு உலகுகளினால் வழங்கப்பட்ட பணம் தமிழர்களைக் கொல்கிறது

## - அருட் திரு.சிங்கராய அடிகள் -

ஆயுதப்படையினரின் நலன்களையும் கவனிக்கும்படி NGO-களை இலங்கை அரசு வற்புறுத்துகிறது. கப்பல் மூலம் உணவு வழங்கல் கண் துடைப்பே.

"தொடர்பகம்" என்னும் கத்தோலிக்க நிறுவனத்தில் உள்ள "பாலம்" அமைப்பின் சார்பாக அருட் திரு.சிங்கராயஅடிகள் நாட்டின் நிலைபற்றி ஒரு சுற்றுமடல் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் கடந்த வருடத்திற்கு குடாநாட்டுக்கு தேவையாக இருந்த அரிசி, மா, சீனி, பருப்பு 1,26,000 மெட்ரிக் தொன் எனவும் இதில் 43,080 மெட்ரிக் தொன்னே வழங்கப்பட்டுள்ளதாகவும், மருத்துவமனைகளுக்கு ஒரு வருடத்திற்கு தேவையான 220 மில்லியன் பெறுமதியான மருந்துகளில் 15 மில்லியன் பெறுமதியான மருந்துகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு வருட காலத்தில் 26 முறை கப்பல்களால் உணவு வழங்கப்பட்டதாக இலங்கை அரசு கூறி வருகின்ற போதிலும் உண்மையில் இக்கப்பல்கள் பூரணமாக உணவுப்பொதிகளால் நிரப்பப்படவில்லை. அத்துடன் இக்கப்பல்களில் தனியார்க்கான பொருட்களே பணம் உழைக்கும் நோக்குடன் இறக்குமதி செய்யப்பட்டதே அல்லாமல் உணவு விநியோகத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

பொருளாதாரத்தடை என்ற பெயரில் மின்சாரம் மட்டுமல்லாமல் உலர்கலங்கள் கூட தடுக்கப்பட்டும் எரிபொருட்கள் விநியோகிக்கபடாமலும் இருப்பதினால் 75% மக்கள் வேலையிழந்து தவிக்கின்றனர். 3,50,000 க்கு மேற்பட்டோர் அகதிமுகாம்களிலும் 2,50,000 க்கு மேற்பட்டோர் இடம் பெயர்ந்தும் வாழ்கின்றனர்.

பாடசாலைகள் இராணுவமுகாம்களாக மாற்றப்பட்டு கல்வி தடைசெய்யப்படுகிறது. மட்டக்களப்பில்

தொடர்ச்சி 3ம் பக்கம் ....

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நேர்மையற்ற, பொறுப்பற்ற விமர்சனங்கள்

இன்று எமது தாயகத்திலே எதிரியின் பயங்கரமான இராணுவ அழுத்தங்களையும் எதிர்த்து நின்று எமது மக்களும் போராளிகளும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.
போராளிகளாகிய நாம் எந்தளவுக்கு அர்ப்பணிப்புடனும் தியாக சிந்தனையுடனும் போராட்டத்தை முன்னெடுக்கிறோமோ, அதற்கும் மேலாக எமது மக்கள் தெளிவுடனும், உறுதியுடனும் போராட்டத்துக்கு ஊன்றுகோலாக இருந்து வருகின்றனர்.
பசியாலும், பட்டினியாலும், இராணுவ அழுத்தங்களாலும் எமது மக்கள் துவண்டாலும், துடித்தாலும் தமது உரிமைப் பிரச்சனையில் உறுதியாகவே உள்ளனர். எமது மக்களின் உறுதியும், தெளிவும் பாராட்டப்பட வேண்டியது. ஆனால் இங்கே வெளிநாடுகளில் ஆங்காங்கே ஒரு சில சக்திகள் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்திக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு மிகப்பெரிய தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏற்படும் சிறிய சிறிய தவறுகளை எல்லாம் வேண்டும் எனறே பெரிதுபடுத்தி இவர்கள் விமர்சித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். இன்று பல்லாயிரக்கணக்கான போராளிகளை உள்ளடக்கி எமது விடுதலை இயக்கம் வளர்ந்துள்ள நிலையில் ஆங்காங்கே சிறு தவறுகள் நடைபெறத்தான் செய்கிறது. ஆனாலும் இயக்கம் அவற்றை தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேலும்,மேலும் செய்து கொண்டுதான் இருக்கின்றது.

எங்கோ ஒரு உறுப்பினர் யாரோ ஒருவரைப் பேசிவிட்டார் என்பதற்காக ஒட்டுமொத்தமாக இயக்கத்தையும், ஒரு விடுதலைப்போராட்டத்தையுமே மாசுபடுத்தக்கூடிய வகையில் சிலர் விமர்சிப்பதை நாம் காணக்கூயிதாக இருக்கின்றது. உண்மையில் இவர்கள் தமது விமர்சனத்தின் தாற்பரியத்தை புரிந்துதான் செயற்படுகின்றனரா? இல்லையா ? என்பது புரியவில்லை.
அதே வேளை எமது தாயகத்திலே காலங்காலமாக மக்களிடையே புரையோடியிருக்கும் பிற்போக்குத் தனத்துக்கும், சுயநலப்போக்குக்கும், சமூக ஒழுங்கு முறைகளுக்கும், சாதியத்துக்கும், பெண்ணடிமைத் தனத்துக்கும், எதிராக இயக்கம் செயற்படுகின்றது. இவ் முற்போக்கு நடவடிக்கையினால் மக்களிடையே தோன்றும் அறிவீனமற்ற வெறுப்புணர்வுகளைத் தூபமிட்டு வளர்த்து வரும் விமர்சகர்களையும் இனங்காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒருபுறம் சீர்திருத்தவாதிகள் என்று தம்மைத் தாமே கூறிக்கொள்கின்றனர். மறுபுறம் இயக்கம் எடுக்கும் ஒவ்வொரு நட.வடிக்கைகளையும் பிழையான கண்ணோட்டத்திலேயே இவர்கள் பார்ப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. வெளிநாடுகளிலே வாழும் தமிழ் மக்களிடையே காணப்படும் பிற்போக்குத்தனங்களையும், சுயநலப்போக்கையும் சுட்டிக்காட்டாமல் புலிகளின் சரியான பாதையைப் பிழையாக விமர்சிப்பதில் யாருக்கும் பயன் கிடைக்கப்போவதில்லை. மேலும் ஒரு சிலர் நன்கு திட்டமிட்டு, பிழையான தகவல்களை மக்களுக்குக் கொடுத்து புலிகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்துவருகின்றனர். இப்படியானவர்களில் நேர்மையான விமர்சகர்கள் இல்லை என்று கூறிவிட முடியாது. அப்படியானவர்கள் தம்மை இனங்காட்டிக் கொள்ள வேண்டும். தேசிய விடுதலைப்போராட்டத்துக்கு

ஆதரவாக குரல்கொடுக்க வேண்டும், ஆதரவளிக்க வேண்டும்.
நேர்மையான விமர்சகர்கள், தமது விமர்சனங்கள் ஒரு தேசிய விடுதலைப்போராட்டத்தை எள்ளளவேனும் மாசு படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆக்க பூர்வமான, நேர்மையான விமர்சனத்துக்கும் விசமத்தனமான விமர்சனங்களுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் அல்ல நாம். விசமத்தனமான, நேர்மையற்ற, பொறுப்பற்ற விமர்சனங்களைச் செய்யும் சிலர் தம்மைச் சீர்திருத்தவாதிகள் என கூறிக்கொள்வது எமக்கு வியப்பையளிக்கின்றது.

மேலும் இன்று தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக சிறிலங்கா அரசுடன் அணிவகுத்து நிற்கும் சில குழுக்களும் தம்மைத்தாமே சிறந்த விமர்சகர்கள் என்று கூறிக்கொள்வதும், தாம் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்றோம் என்று கூறிக்கொள்வதும் மேலும் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.
இப்படியான பல குழப்பச் சக்திகளுக்கும், எதிர்ப்புரட்சியாளர்களுக்கும், இவர்களின் நேர்மையற்ற பொறுப்பற்ற விமர்சனங்களுக்கும் மத்தியில் உண்மையான விடுதலைப் போராட்டம் எப்படியும் எழுந்தே நிற்கும்.

# மண்மீட்பு நிதியின் தேவையும் தமிழீழ மக்களின் கடமையும்

அதிகரித்துவரும் போர்ச்செலவுகளை ஈடுசெய்யும் முகமாக எமது மக்களிடம் இருந்தே நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் எழுந்து விட்டது. அதனால் தர வசதியுள்ள குடும்பங்களிடமிருந்து தமிழீழ மீட்பு நிதியாகத் தலா இரண்டு பவுண் தங்கத்தை அல்லது 10,000 ரூபா பணத்தை கடனடிப்படையில் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். பெறப்படும் தங்கம் மாதாந்தம் 100 கடன் பத்திரதாரர் என்ற அடிப்படையில் மீளளிக்கப்பட்டு வருகின்றது.

2 பவுண் தங்கத்தை அல்லது 10,-000 ரூபா பணத்தைச் செலுத்துவதற்கு வசதியற்ற எவரிடமிருந்தும் மீட்புநிதியைப் பெறுவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

யாழ் மாவட்டத்திலுள்ள கணிசமான குடும்பங்கள் எமது வேண்டுகோளை ஏற்று மனவிருப்புடன் மீட்பு நிதியை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதே சமயம் இன்னொரு பகுதியினர் தரவசதியிருந்தும் தங்களது தேசியக்கடமையைத் தட்டிக் கழித்து வருகின்றனர். இத்தகையவர்களது பொறுப்பேற்ற செயலினால் மீட்பு நிதியைச் சேகரிக்கும் செயலானது ஆங்காங்கே சிரமங்களைச் சந்திக்கின்றது.

இச் சிரமங்கள் என்ன? என்பதையும் இம் மீட்புநிதியை தர வசதியுள்ள அனைவரிடமிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையையும், அவசியத்தையும் இங்கே தெளிவுபடுத்துகின்றோம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்று மிகப் பெரிய வளர்ச்சிக்கட்டத்தில் நிற்கின்றது. ஒரு சில இளைஞர்களைக் கொண்டுதலைமறைவு சக்தியாகத் தோற்றம் கண்ட எமது இயக்கம், இன்று பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைக் கொண்ட பெரியதொரு தமிழர் படையாக வளர்ச்சி கண்டுள்ளது.

பலம் வாய்ந்த சிறீலங்காவின் முப்படைகளையும் எதிர்த்துச் சமர்புரியுமளவிற்கு எமது படையின் திறமை உயர்ந்து நிற்கின்றது.

மிகப்பெரிய பொருட்செலவைச் செய்து நவீன படைக்கலங்களைத் தாங்கி நிற்கும் சிங்களப்படையணிகளுக்கெதிராக, மட்டுப்படுத்தப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு புதிய போர் நுட்பங்களைப் பயன்படுத்தி போர் புரிந்து கொண்டு இருக்கின்றோம்.

ஒரு போரென்பது மிகப் பெரும் பொருட்செலவில் நடத்தப்படுவதாகும்.

போர் விரிவடைய விரிவடைய அதற்கேற்றாற்போல் பொருட் செலவும் அதிகரிக்கும்.

ஒரு போரில் முன்னணியில் நிற்க வேண்டுமாயின் செலவைப் பொருட்படுத்த முடியாது.

சாதாரணமாகப் போரிடும் நாடுகள் தமது தேசிய வருமானத்தில் ஏறக்குறைய கால் பங்கைப் போருக்கே செலவிடும்.

சிறீலங்கா அரசும் அடுத்த வருடத்திற்கு 1500 கோடி ரூபாவிற்கு

தொடர்ச்சி 6ம் பக்கம் ....

மண்மீட்பு நிதி கொடுத்தோர்க்கு நன்றியுடன் மீளளிப்பு !



# வில்லி லில்லி கப்பலில் தனியாரின் மருந்துகளே எடுத்துவரப்பட்டன

இம்மாதம் வந்த கப்பலில் யாழ் மாவட்டத்துக்கு அவசரமாக எடுத்துவரப்பட்டிருக்க வேண்டிய 100 மெற்றிக் தொன் மருந்துவகைகள் எடுத்துவரப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் தினமும் பல குழந்தைகள் மருந்துகள் இல்லாமல் இறந்துகொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் வில்லி லில்லி கப்பலில் ஏற்ற இருந்த 100 மெற்றிக்தொன் மருந்தை ஏற்றாது தனியார் வர்த்தகர்களுக்கு 450 மெற்றிக் தொன் பொருள்கள் ஏற்றப்பட்டுள்ளன. இப்பொருள்கள் நியாயமான விலையில் மக்களுக்கு கிடைக்கப்போவதில்லை என தமிழர் நலன் காக்கும் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், யாழ் செயலக நிர்வாகமும் இவ்விடயங்களில் யாழ் மாவட்டத்தில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்கின்ற பல இலட்சம் சாதாரண மக்களை கவனத்தில் எடுப்பதாக இல்லை எனவும் அதன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், செயலக நிர்வாகமும் பல கட்டங்களில் குழந்தைகளின் பால்மா, மருந்துகள், சவர்க்காரம் போன்ற பொருள்கள் கிடைக்க வழி காண்பதாக கூறிவந்தபோதும் நடப்பது வேறாக உள்ளது. தனியார் வர்த்தகர்கள் தமது பொருள்களை வேறு கப்பலில் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சம்பந்தப்பட்ட அனைவரும் புரிந்து கொள்வதுடன் அரசாங்க அதிபரின் பெயரில் அத்தியாவசிய பொருள்களை தருவித்து சாதாரண மக்களுக்குக் கிடைக்க வழி காட்ட வேண்டியது மிகவும் அவசியம்.

தனியார் வர்த்தகர்கள் எடுத்து வருகின்ற பொருள்கள் பங்கீட்டு முறைக்கு உள்ளாக்கப்படுவதோ, நியாயமான விலைக்கு விற்கப்படுவதோ இல்லையென்பதால் வாங்குகின்ற திறனற்ற மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.


இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதியான அமைதியை நோக்கி

- ஒருநாள் கருத்தரங்கு -

நீதியான அமைதியை நோக்கி (Towards a Just Peace) என்ற தலைப்பில் முழு நாள் கருத்தரங்கு ஒன்றை சர்வதேச தமிழர் சம்மேளனம் (International Fedaration of Tamils) பெப்ரவரி 15ம் திகதி காலை 9.30 மணிக்கு School of oriental and African studies, University of London, Thomhaugh street, Russel Squre, London WC1 HOXG. இல் நடத்த உள்ளது.

இக்கருத்தரங்கு தமிழீழத்தேசிய விடுதலைப் போராட்டதின் தன்மைகளை ஆராய்ந்து நீதியான அமைதியை நோக்கி இலங்கைத் தீவினர் செல்லக்கூடிய வழி முறைகளை முன்மொழிய உள்ளது. இது தொடர்பாக மேலதிக விபரங்களுக்கு IFT. P.O.Box 417, Cambridge CB 3 9LZ. U. K. என்ற முகவரியுடன் தபால் மூலம் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். இக்கருத்தரங்கில் கட்டுரை வாசிக்க விரும்புபவர்கள் பெப்ரவரி 10ந் திகதிக்கு முன்னர் இதே முகவரிக்கு தமது ஆக்கங்களை அனுப்பி வைக்கவேண்டுமென சர்வதேச தமிழர் சம்மேளனம் கேட்டுள்ளது.



www.tamilarangam.net



சீனன்குடா

# விமானத்தளம் நிர்மூலம்

**1 உலங்கு வானூர்தி , 4 பயிற்சி விமானங்கள் சேதம்**
**150 ற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்**


குடாநாட்டை சுற்றி வளைத்ததாகவும், விடுதலைப்புலிகளின் கழுத்தை நெருக்கிப் பிடித்திருப்பதாகவும், சிறிலங்கா அரசு கூறி வரும் அதேவேளை எதிர்பார்த்திராத வகையில் எதிர்பார்க்காத கோணத்தில் மரணஅடி ஒன்றை சிறிலங்கா அரசிற்கு விடுதலைப்புலிகள் கொடுத்துள்ளனர். சிறிலங்கா அரசின் இராணுவத்தீர்வுக் கண்ணோட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இத்தாக்குதல் அமைந்து விட்டது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் சீனன்குடா விமானத்தளத்தையே நிர்மூலமாக்கியுள்ளதென சிறிலங்கா பிரதமர் டி.பி.விஜயதுங்கா பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

இத்தாக்குதலில் 150ற்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் பலியாகி, 6 பாசறைகளும், 4 பயிற்சி விமானங்களும், ஒரு உலங்கு வானூர்தியும், 5ற்கும் மேற்பட்ட கட்டிடங்களும் சேதமடைந்துள்ளன. இச்சம்பவத்தின் போது இலங்கை பாதுகாப்புப்படையின் பயிற்சி பெற்ற விமான ஓட்டிகள் சிலரும், ஆகாயப்படையின் விசேட அதிரடிப் படையினர் பலரும், இறந்து போனதாகத் தெரிய வருகிறது. அத்துடன் இங்கிருந்த பாரிய ஆயுதச்சேகரிப்பு நிலையம் வெடித்துச் சிதறியதால் பல இலட்சம் ரூபா பெறுமதியான ஆயுதங்களை இலங்கை இராணுவம் இழந்துள்ளது. விமான ஓடு பாதை, விமானப்படை வைத்திய நிலையம் என்பனவும் பலத்த சேதமடைந்துள்ளன.

இதற்கிடையே இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட அகதிகளுடன் வந்த புகைப்படக்காரரர்களுக்கு சீனன் குடாவை பார்வையிடவோ அல்லது படங்கள் எடுக்க அனுமதிக்கவோ முடியாது என இலங்கை அரசு மறுத்துள்ளது. இது இத்தாக்குதலின் சேதத்தினது உண்மை நிலையை உலகுக்கு மறைக்க இலங்கை அரசு எடுத்துள்ள முயற்சியாகும்.

## தடைமீறிப் போராட மக்கள் தயார்




தமிழீழ மக்களின் மன உறுதிகளைப் பிரதிபலிக்கும் சுவரொட்டிகள் குடாநாடெங்கும் ஒட்டப்பட்டுள்ளது.

அம்பாறையில்

# இடம் மாறிய படையினரை இடை மறித்துத் தாக்குதல்

அம்பாறை மாவட்டத்தில் பொலிசாரும் விமானப்படையினரும் இடம் விட்டு இடம் மாறிச் சென்ற வேளையில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி 50ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலின் போது படையினர் கண்ணி வெடியில் சிக்குண்டு நிற்கையில் சுற்றிவர இருந்த மறைவிடங்களிலிருந்து புறப்பட்ட புலிகள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என அறியப்படுகிறது. இதனால் பாரிய உயிரிழப்புக்களையும் ஆயுத இழப்பையும் அடைந்த இலங்கை இராணுவம் விமானங்கள் மூலம் குண்டு வீசி மக்கள் குடிமனைகளில் இன அழிப்பு நடாத்தியுள்ளது.

அத்துடன் கிராமங்கள் நகரங்களைச் சுற்றி வளைத்து 12 வயதிற் குட்பட்ட 20 சிறுவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை இராணுவ முகாமுக்கு விசாரணைக்கென கொண்டு சென்றுள்ளனர். இதனால் ஆலையடி வேம்பு, பனங்காடு, கோனாவில் பகுதி சிறுவர்கள் பெரும் அச்சத்துடன் வாழ்வதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

புலிகள் தென் தமிழீழத்தில் அழிக்கப்பட்டு விட்டார்கள் கிழக்கு மாகாணம் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்ற இலங்கை அரசின் கூற்றைப் பொய்யாக்கும் செயலாக இத்தாக்குதல் அமைந்துள்ளது.

# 92 நாட்களில் 256 படையினர் பலி

## 155 ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளோம்

கடந்த மூன்று மாதங்களில் (ஒக்.நவ.டிச.) சிறீலங்கா ஆயுதப் படையினர் பாரிய இழப்புக்களையும் சேதங்களையும் சந்தித்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் தமிழீழம் எங்கும் பரவலாக நாம் தொடுத்த தாக்குதல்களில் 256 சிங்களப் படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 155 ஆயுதங்கள் உட்பட பல்லாயிரம் ரவைகளையும், கணிசமானளவு வெடிப் பொருட்களையும், இராணுவ உபகரணங்களையும் நாம் கைப்பற்றியுள்ளோம்.

மணலாறு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சிங்களப் படையணிகள் மீது வெற்றிகரமான முறையில் பாரிய தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

அதே சமயம் இந்த மூன்று மாத காலத்தில் (92 நாட்கள்) பல்வேறு போர் முனைகளிலும் நாம் 86 புலிவீரர்களை இழந்திருக்கின்றோம்.

மட்டக்களப்பு - அம்பாறை பிராந்தியத்தைப் பொறுத்தளவில் கடந்த மூன்று மாதமும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த காலப் பகுதியாக அமைந்துவிட்டது எனலாம்.

அங்கே, தொடரானதும், பரவலானதுமான எமது இராணுவ செயற்பாடுகளினால் சிங்களப் படையினர் அங்கே இதுவரை நாளும் நடைமுறைப்படுத்தி வந்த இராணுவக் கொள்கையில் மாற்றத்தைக் கொண்டு வரும்படி நிர்ப்பந்தித்து விட்டது.

## மேற்கு உலகு....

212 பாடசாலைகளும் யாழ் மாவட்டத்தில் 79 பாடசாலைகளும் கடுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளன.

1989ம் ஆண்டு புள்ளி விபரப்படி 4,50,000 கால்நடைகளும் 6,50,000 பறவைகளும் வடக்கு மாகாணத்தில் இருந்தன. இன்று 75% மானவை அழிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தின் காசுப்பயிர்களெனப்பட்ட மிளகாய், புகையிலை, வெங்காயம் என்பன பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. 80% மான வாழைத் தோட்டங்கள் பாழடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வருட காலத்தில் 846 பேர் விமானக்குண்டு வீச்சால் மட்டும் இறந்துள்ளனர். பயங்கரமான முறையில் மனிதத்தன்மையே இல்லாமல் 498 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 31 சடலங்கள், " எதுவித விசாரணையும் இன்றி சடலங்கள் எரிக்கப்படலாம்" என்ற கொடிய சட்டத்தின் கீழ் எரிக்கப்பட்டுள்ளன. 115 பேர் பாலியல் வன்முறைக்கு பின் கொல்லப்பட்டுள்ளனர். காணாமல் போனவர்கள் தொகை ஆயிரக்கணக்கில் உள்ளது.

உதவிக்கென வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குப் பலதடைகளை இலங்கை அரசு ஏற்படுத்துகிறது. அத்துடன் நில்லாது டெயிலி நியூஸ் பத்திரிகைச் செய்தியின் படி ஆயுதபடைகளின் நலன்களையும் கவனிக்கும்படியும் இலங்கை அரசு அரசசார்பற்ற நிறுவனங்களை வற்புறுத்தியுள்ளது.

என எழுதியுள்ள சிங்கராய அடிகள் இதற்கு ஆதாரமாக 5 பட்டியல்களை புள்ளி விபரங்களுடன் இணைத்துள்ளார்.

## யாழ் - சிறீதரில் திரைப்படம்

அல்ஜீரிய நாட்டு விடுதலைப்போராட்டத்தை தமிழாக்கம் செய்து யாழ் சிறீதர் திரையரங்கில் திரையிட்டனர்.

அல்ஜீரிய மக்கள் எவ்வாறு தமது விடுதலையை பெற்றெடுத்தனர் என்ற இவ் விறு விறுப்பான திரைப்படத்தை பார்க்கவென இளைஞர்கள், பொதுமக்கள் உற்சாகத்துடன் திரண்டு வந்தனர். தினமும் 4 மணிக்கும், சனி,ஞாயிறு தினங்களில் மேலதிக 6 மணி காட்சியுடனும் இப்படம் காண்பிக்கப்பட்டது.

## சிறைக் காவலர்கள் நியமிப்பு

தமிழீழக் காவல்துறை, சிறைக்காவலர்களை நியமிக்கவுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை நாவலர் வீதியிலுள்ள தமிழீழக் காவல்துறைத் தலைமைச் செயலயகத்தில் நடைபெற்றது. 8ம் வகுப்புச் சித்தியெய்தி உயரம் 5அடி 6அங்குலம் உள்ள ஆண், பெண் இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு.நடேசன் இதற்கான நேர்முகத் தெரிவுக்குப் பொறுப்பாக இருந்தார்.

## பிரித்தானிய அரசு

### 38 இலட்சத்து 50 ஆயிரம் உதவி

"யுனிசெப்" என்ற அமைப்பின் மூலம் வடக்கு கிழக்கு அகதிமுகாம்களுக்கான அத்தியாவசிய மருந்துகளை வாங்கவென 38 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பிரிட்டிஸ் அரசு கொடுத்து உதவியுள்ளது.

## விசாரணையின் பின் விடுதலை

பல்வேறு சமூகவிரோத செயல்களைச் செய்தார்கள் என்ற பெயரில் விடுதலைப்புலிகளால் விசாரணைக்கு என தடுத்து வைக்கப்பட்டிருந்த 40 பேர் விசாரணைக்குப் பின் யாழ் செயலகத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

## "மணலாறு" நூல் வெளியீடு

"மணலாறு" என்னும் தலைப்பில் மணலாற்றுப் பகுதியின் வரலாற்றைக் கூறும் நூல் ஒன்று வேம்படி மகளிர் கல்லூரியில் வெளியிடப்பட்டது.


## களத்தில் பத்திரிகை - வருடச் சந்தா

( பிரித்தானியாவுக்கு மட்டும் )

களத்தில் (மாதமிருமுறை)

பத்திரிகையை தொடர்ச்சியாக பெறவிரும்புவோர் ஒரு வருடத்துக்கான பணம் 12 பவுணை காசோலையாகவோ அல்லது தபாற்கட்டளையாகவோ "U.T.O." என்ற பெயருக்கு அனுப்ப வேண்டிய முகவரி:-

U.T.O.
54, Tavistock Place
London WC1H 9RG, U.K.

உங்கள் பெயர் ____________________
முகவரி ____________________

தொ.பே.இல ____________________



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறைந்த ஒதுக்கீட்டில் அதிக பயன் உழைப்பாள மக்களின் சாதனை

- 31 குளங்கள்
- 32 வாய்க்கால்கள்
- 52 உவர்நீர் தடுப்பு அணைக்கட்டுகள்
- 2 வடிகாலமைப்புகள்



## மக்களோடு புலிகள்

யாழ் குடாநாட்டில் 4 குளங்களையும், 9 வாய்க்கால்களையும், ஒரு வடிகாலமைப்பு, ஒரு உவர் நீர்த்தடுப்பணைக்கட்டு ஆகியவற்றை புனரமைக்கவெனச் சிங்கள சிறிலங்கா அரசு இருபத்தொரு இலட்சம் ருபாவை மட்டும் ஒதுக்கியது. இத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளையும், ஊழல்களையும் களையும் முகமாக இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுப்பேற்றனர்.

இதே தொகையைக் கொண்டு மக்களுடன் இணைந்து செயற்பட்ட புலிகள் 31 குளங்கள், 32 வாய்க்கால்கள், 52 உவர்நீர்த்தடுப்பு அணைக்கட்டுகள், 2 வடிகாலமைப்புக்கள் ஆகியவற்றைப் புனரமைத்து சாதனை புரிந்துள்ளனர்.தெல்லிப்பளையில் 5, சங்கானையில் 8, சண்டிலிப்பாயில் 5, நல்லூரில் 2, சாவகச்சேரியில் 8, உடுவிலில் 2, கோப்பாயில் 1 என மொத்தம் 31 குளங்களில் 13756 கன அடி மண்வெட்டப்பட்டு அகல்வாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2594 ஏக்கர்காணி பயன் பாட்டைப் பெற்று சுமார் 4430 குடும்பங்களுக்கு பயனை அளித்துள்ளது.

தமிழீழத்தில் நிலத்தடி நீர்வளமே அதிகமாக உள்ளது. இதனைப் பேணுவதற்கு குளங்கள் வடிகாலமைப்பு போன்றவற்றை மிகக் கவனமாகப் பேணிப்பாதுகாக்க வேண்டிய தேவை உண்டு. இதனாலேயே தமிழீழ மன்னர்களும், சிற்றரசர்களும் குளங்கள், வடிகாலமைப்புக்கள் போன்றவற்றைக் கட்டி எழுப்பினர். ஆனால் திட்டமிட்டு நன்னீர் வளத்தை அழிக்கும் நோக்குடன் சிறீலங்கா அரசு நீர் நிலைகள் புனரமைப்பு வேலைகளை கைவிட்டுவிட்டது. தற்பொழுது வெளிநாட்டு அரசு சார்பற்ற நிறுவனங்கள் இவ்விடயத்தில் நிதி உதவி செய்து புனரமைப்பில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்குடன் மிகச் சிறு தொகையை கண் துடைப்பாக நீர் நிலைகளின் புனரமைப்புக்கு ஒதுக்கியது.

கடலேரியையும், சுண்ணாம்புப் பாறை அமைப்பையும் கொண்ட தமிழீழத்தில் உவர்நீர் விகிதாசாரம் அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறு அதிகம். இதனாலேயே உவர்நீர்த்தடுப்பு அணைகள் கட்டுவதும் பேணுவதும் முக்கியமாகிறது.

அரியாலையில் 150 அடிநீள உவர் நீர்த்தடுப்பணைக்கட்டு 185 கன அடி மண் அகல்விக்கப்பட்டதன் மூலம் திருத்தப்பட்டது.

அராலியில் 4 மைல் நீளமான 1வது, 2வது அணைக்கட்டுக்கள் முறையே 2565 கனஅடி, 1200 கனஅடி மண் அகல்விக்கப்பட்டு திருத்தப்பட்டு 350 ஏக்கர் விவசாய நிலம் பயன் பெற்று இதனால் சுமார் 327 குடும்பங்கள் பயன்பட்டன. சிலிந்து வெள்ள வாய்க்கால் 2190 அடி நீளமானது. இதில் 147 கனஅடி மண் வெட்டப்பட்டு அகல்விக்கப்பட்டுள்ளது.

தனங்கிளப்பில் மூன்று மைல் நீளமான உவர்நீர்த்தடுப்பணை புனரமைக்கப்பட்டு 800 கனஅடி தோண்டப்பட்டு 400 ஏக்கர் நிலம் பயன் பாட்டின் கீழ் கொண்டுவரப் பட்டதால் சுமார் 200 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.

**போராளர் யாரென்றால்....**
**சொந்த மண்ணின் புனித நிலையை**
**உணர்ந்துகொண்டு புலியாய் நிற்போர்**
**- முருகையன் -**

தமிழீழம் பொதுவாக வளம் பொருந்திய ஒரு நாடு என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை. ஆனால் தமிழீழத்தின் பொருளாதார வளத்தை மேம்படுத்துவதற்கு அதாவது முன்னேற்றமடையச் செய்வதற்கு சிறீலங்கா அரச நிர்வாகம் எப்போதுமே உதவி வழங்காது என்பது வெளிப்படையானது. ஏனெனில் தமிழீழத்தின் பொருளாதார வளத்தைச் சிதைத்து அதன் தனித்துவத்தை இழக்கச் செய்து அதன் போராட்ட குணாம்சத்தை அழிப்பதற்குச் சிறீலங்கா அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றது.

யாழ் - குடாநாட்டைப் பொறுத்தவரை அதனைச் சூழ கடல் வளம் இருந்தாலும் அதன் ஜீவாதாரமாக நிலத்தடிநீர் வளமே உள்ளது. இந்த நீர்வளம் அற்றுப் போனால் இக்குடாநாட்டின் நிலப்பரப்புகளில் மனித இனமோ - விலங்குகளோ -தாவரங்களோ உயிர்வாழ முடியாத வரண்ட பாலை நிலங்களாக மாறிவிடும் சாத்தியப்பாடு உள்ளது.

இன்று யாழ் குடாநாட்டு நிலப்பரப்பின் நீர்வளம் அருகி வருவதாக ஒரு கணிப்பீடு உள்ளது. மழை நீர் நிலப்பரப்பில் அதிகளவு தேக்கி வைக்கப்படாததும் பெருகிவரும் குடிசன அடர்த்தியும், உப உணவுப் பயிர்ச் செய்கைக்கு நீர் வளம் அளவுக்கதிகமாகவும், முறைகேடாகவும் பயன்படுத்தப்படுவதுமே இதற்கான காரணங்களாகும்.

இத்தகைய காரணிகளால், குடாநாட்டின் நன்னீர் உவர்நீராக மாறுகிறது. அத்துடன் நன்னீர் மட்டமும் குறைகிறது. இதனால் குடாநாடு வரண்ட பிரதேசமாக மாறிவிடும் அபாயம் உள்ளதாக நீர்வள ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

குடா நாட்டின் நன்னீர் வளத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு காலகட்டத்திலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டே வந்துள்ளன.

மழைநீரைத் தேக்கிவைக்கும் குளங்களும், கடல்நீர்- நிலப்பரப்புக்களில் ஊடுருவுவதைத் தடுப்பதற்குரிய கடல்நீர் அணைக்கட்டுகளும் தமிழ் மன்னர் ஆட்சிக்காலங்கள் தொடக்கம் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

தமிழீழத்தின் இந்த நிலை சிங்கள அரச நிர்வாக காலத்தில் மாற்றம் பெற்றது. இக்குளங்களும் - அணைக்கட்டுகளும் கவனிக்கப்படாமல் விடப்பட்டது. இதனால் குடாநாட்டின் நன்னீர் வளம் பாதிக்கப்படும் அபாய நிலை ஏற்பட்டது. குடாநாடு எதிர்நோக்கும் இந்த அழிவைத் தடுப்பதற்குரிய எந்தவிதமான நடவடிக்கையையும் இதுவரை காலமும் இருந்த எந்தவொரு சிறீலங்கா அரசும் எடுக்கவில்லை. மாறாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தடுப்பதிலேயே தமது கவனத்தைச் செலுத்தின. இதற்கு உதாரணமாக தொண்டமானாறு நன்நீர் திட்டத்தை குறிப்பிடலாம். அதாவது உப்புநீரான தொண்டமானாற்றை நன்னீராக மாற்றும் திட்டம் 40 வருடகாலமாகச் சிறீலங்கா அரசுகளால் தடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் அபிவிருத்திக்கு என்று சொல்லிக்கொண்டு வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் பெருமளவு நிதியைச் சிறீலங்கா அரசு, சிங்களப் பகுதிகளின் அபிவிருத்திக்கும் சிங்களக் குடியேற்றப் பகுதிகளின் அபிவிருத்திக்குமே பெருமளவில் செலவிடுகிறது. அத்துடன் தனது பாதுகாப்புப் படையைப் பலப்படுத்துவதற்கும் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்கிறது.

இத்தகைய நிலையில், உதவி வழங்கும் வெளிநாடுகளை ஏமாற்றவும் ஒரு கண்துடைப்பிற்காகவும் சிங்கள அரச நிருவாகத்தினர் சிறு தொகை நிதியைத் தமிழ்ப் பகுதிகளின் தேவைக்கு என ஒதுக்குகின்றனர். இச்செயலின் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு என்று பெறப்பட்ட நிதி சகல பகுதிகளுக்கும் பங்கீடுசெய்யப்படுகின்றது என்ற தோற்றத்தை உதவி வழங்கும் நாடுகளுக்குக் காட்ட சிறீலங்கா அரசு முயற்சிக்கிறது. இதன்படி அண்மையில் சிங்கள அரச நிர்வாகம் 4 குளங்கள், 9 வாய்க்கால்கள், 1 வடிகாலமைப்பு, ஓர் உவர்நீர் அணைக்கட்டு ஆகியவற்றின் புனரமைப்பிற்கு என ஒரு சிறுதொகையான 21 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்தது.

இதனிடையே தமிழீழப் பகுதிகளுக்கு ஒரு சிறுதொகை நிதி ஒவ்வொரு வருடமும் ஒதுக்கப்படுவதும் அவை - திரும்பிச் செல்வதும் வழமையான ஒன்று என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

சிங்கள அரசினால் காலம் தாமதித்து குறைந்த கால அவகாசத்துடன் அனுப்பப்படும் இப்பணத்தை இங்கிருக்கும் சில அரச அதிகாரிகள் தங்கள் அலட்சியத்தாலோ அல்லது வேறும் காரணங்களுக்காகவோ வெளியில் தெரியாமல் மிகவும் புத்திபூர்வமாக திருப்பியனுப்பி வைப்பார்கள். அந்தப் பணம் சிறீலங்கா அரச பாதுகாப்பு நிதியில் சேர்க்கப்படும். இந்நிலை தற்போது பெருமளவில் மாறியுள்ளது என்பது குறிப்பிடக்கூடியது.

இத்தகைய ஒரு நிலையில் - குள நிர்மாண வேலைகளுக்கான இத் திட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய நாம் எமது பொறுப்பில் எடுத்துக் கொண்டோம்.

## சங்ககாலமும் சமகாலமும்

சங்காலப் புலவரான ஒளவையாரின் தமிழ்ப் பணியை மெச்சிய "கோரைக்கால் ஆள்வான்" என்ற குறுநில மன்னன் ஒளவையாருக்குத் தனது பரிசாக யானை ஒன்று தருவதாக வாக்குறுதி அளித்தான்.
குறுநில மன்னன் குறுகிய மனப்பாங்குடையவன். அவன் ஒளவையாரை ஏமாற்றவே திட்டம் போட்டு இருந்தான். இது ஒளவையாருக்குத் தெரியாது.
சில நாட்கள் சென்ற பின்னர் ஒளவையார் மேற்படி அரசனிடம் சென்று அப் பரிசினைத் தருமாறு கேட்டார். அதற்கு அரசன் தற்போது தனது மாடத்தில் யானைகள் எதுவும் இல்லையெனவும் குதிரையொன்று பரிசாகத் தருவதாகவும் வாக்குறுதி அளித்தான். ஒளவையார் அவனின் சொல்லை நம்பி, சில நாட்கள் சென்ற பின்னர் மீண்டும் அரசனிடம் சென்று தனக்குத் தருவதாகச் சொன்ன குதிரையைத் தருமாறு கேட்டார். அதற்கு அரசன் தன்னுடைய லாயத்தில் இப்போது குதிரைகள் எதுவும் இல்லை என்றும் அதற்குப் பதிலாக எருமைகள் இரண்டு பரிசாகத் தருவதாகவும் வாக்குறுதியளித்தான். மேலும் சில நாட்கள் நகர்ந்தன. பொறுமை இழந்த ஒளவையார் மீண்டும் அரசனிடம் சென்று தனக்கு வாக்குறுதியளித்தபடி இரண்டு எருமைகளையும் கேட்டார். இதற்கு அரசன் தனது நன்செய் நிலத்தில் இப்போது எருமைகள் எதுவும் இல்லை எனவும், எருது ஒன்று பரிசாகத் தருவதாகவும் சொன்னான். பொறுமையின் எல்லையைக் கடந்து விட்ட நிலையிலும் ஒளவையார் மேலும் பொறுமையோடு சில நாட்கள் காத்திருந்தார். பின்னர் ஒரு நாள் அரசனிடம் சென்று தனது பரிசினைக் கேட்டார். அதற்கு அரசன் தன்னுடைய மாட்டுத் தொழுவத்தில் இப்போது எருதுகள் எதுவும் இல்லை என்றும் எருதுக்குப் பதிலாக ஒளவையாருக்கு ஒரு புடவை பரிசளிப்பதாகவும் சொன்னான். ஒளவையாருக்கு அவமானம் ஒரு புறம், கோபத்தால் கண்கள் சிவந்தன. பரிசு வாங்கி பரிசுகெட விரும்பவில்லை அரசனின் இழி செயலை பாட்டால் வைது ஒரு செய்யுள் இயற்றினார். அச் செய்யுள் பின்வருமாறு:-

கரியாகி பரியாகி
காரெருமை தானாகி
எருதாகி முழுப்புடவையாகி
திரி திரியாய்
தேரைக்கால் பெற்று மிக
தேய்ந்து கால் ஓய்ந்ததே
கோரைக்கால் ஆள்வான்
கொடை.

## சமகால நிகழ்வு ஒன்று

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி பகுதியின் புகழ் பூத்த புலமை சான்ற பெருமகன் பண்டிதர் கந்த முருகேசனாரின் முதல் மாணவனும் தமிழ் அறிஞனுமாகிய தமிழ் அன்பர் ஒருவர்தான் நித்தமும் தனது தமிழ்ப் பணிக்காக வடமராட்சியிலிருந்து வலிகாமம் வந்து செல்லத் தனக்குத் துவிச்சக்கரவண்டி ஒன்று தந்துதவுமாறு கேட்டு விடுதலை இயக்கத்தின் கலை, பண்பாட்டு கழக பொறுப்பாளருக்கு செய்யுள் வடிவில் விண்ணப்பம் ஒன்றை அனுப்பி வைத்தார். அச் செய்யுள் இது தான்.

கொந்துமணி தேர் வேண்டேன் கோமகனே உன்னிடத்தில்
கந்து கடாக்களிறும் யான் வேண்டேன் முன் நீயழைத்தால்
வந்து செல்ல வளமாக மனமகிழ்ந்தே ஒரு சிறிய
உந்துருளி தந்துதவ வல்லையோ உடன் பிறப்பே.


பாடலைப் படித்த கவிஞர் பெருமான் பேரறிஞனின் சொற் சுவை பொருட்சுவையில் சொக்கியே போனார். மேற்படி விடயம் விடுதலை ஸ்தாபனத்தின் தலைமைப் பீடத்தின் செவிகளுக்கும் எட்டியது. விடுதலை இயக்கத் தலைவரோ தினசரிப் பத்திரிகையை எடுத்தாலும் முதலில் அதிலுள்ள கவிதைகளையெல்லாம் ஒன்றும் விடாமல் படித்துவிட்டுத் தான் முதல் பக்கச் செய்தியை கூடப் படிக்கும் கலாரசிகன். பிறகு என்ன? துவிச்சக்கரவண்டி கேட்ட தமிழ் அறிஞனுக்கு இப்போது " சாளி" மோட்டார் சைக்கிள் ஒன்று பரிசாகக் கொடுக்கப்பட்டுள்ளது எழுத்தறிந்து கலை பயின்ற அந்தப் பழுத்த பேரறிஞர் தனக்கு வழங்கப்பட்ட சாளிக்கு தனித்தமிழில் "செம்பவள வல்லி" எனப் பெயர் சூட்டி தினமும் சவாரி செய்கிறார்.

பொன்.பூலோகசிங்கம் (நன்றி: சிரித்திரன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## லெப்.இளஞ் செழியன்

"எனக்கு ஸ்டக் இல்லாத பிறண் தரவேணும்" என்றான் இளஞ்செழியன். அப்போது நான் பலாலி இராணுவ முகாமின் இராணுவ காவலரண்களைப் பார்த்து,வரை படத்தினைக் குறிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தேன். இவ்வேலைக்காக இளஞ்செழியனும் இன்னும் சில போராளிகளும் என்னுடன் சேர்ந்து கடமையாற்றினார்கள். முகாமின் காவலரணைப் பார்க்கும்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று விளங்கப்படுத்திவிட்டு ஒவ்வொருத்தருக்கும் என்ன ஆயுதம் வேணும் என்று கேட்ட பொழுதே இளஞ்செழியன் இவ்வாறு கூறினான். "ஏன் ஸ்டக் இல்லாத பிறண் வேணும் என்று கேட்கின்றான் எனத் திருப்பிக் கேட்டேன். "கோட்டையில் நான் அனுபவப்பட்டனான்" எனத் தொடர்ந்தான்.

கனரக ஆயுதங்கள் வைத்திருப்பதற்கும், அதனைப் பயன்படுத்துவதற்கும் இளஞ்செழியன் மிகுந்த ஆர்வம் கொண்டவனாக விளங்கினான். குறிப்பாக 'பிறண் எல்.எம்.ஜி" வைத்திருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். அவனுடைய ஆசைகள் வித்தியாசமானவை. சண்டைக்குப் போகவேண்டும், எதிரிகளை வீழ்த்த வேண்டும், அவர்களது ஆயுதங்களை கைப்பற்ற வேண்டும் என்பனவாகும். சென்ற வருடம் ஊர்காவற்துறை இராணுவத்தினர் மீதான திட்டமிட்ட பதுங்கித் தாக்குதலின்போத இவன் துப்பாக்கியுடன் "கிட்பாக்" ஒன்றையும், கத்தி ஒன்றையும் கூட எடுத்துச் சென்றிருந்தான். இந்த பாக் எதற்காக என்று கேட்ட போது "ஆமியிட்டயிருந்து குண்டுகளையும், ரவைகளையும் போடத்தான்" எனப் பட்டென பதிலளித்தான். அது சரி கத்தி எதற்கு? என்று கேட்டேன். ஒருகணம் திரும்பிப் பார்த்து விட்டு 'ஆமியின்ர கோல்சரை களட்டேலாட்டால் அறுத்தெடுக்கத்தான்' என்றான். அவன் குரலில் உறுதி இருந்தது. நம்பிக்கையிருந்தது. இத்தாக்குதல்களில் இராணுவத்திடமிருந்து இரு துப்பாக்கிகளும், தொலைத் தொடர்புச் சாதனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. 3.9. 1973 அன்று வல்வை நகரின் பகுதியான மயிலியதனையில் யோகேஸ்வரன் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தான். இவன் இயக்கத்திற்குச் சேர்ந்ததே தனிக்கதை. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணில் புரிந்த அடாவடித்தனங்களைப் பொறுக்க முடியாமல் இவன் இயக்கத்தில் சேர விழைந்தான். அப்போது வடமராட்சிப் பகுதி கடற்பகுதிப் பொறுப்பாளராக இருந்தவர் இவனை சேர்ப்பதற்குத் தயங்கினார். ஏனென்றால் இவன் பெற்றோர்களுக்கு ஒரேயொரு பிள்ளை. இவனது தகப்பனாரும் ஒரு போராளி. புகழ் பெற்ற கவிஞனும் மக்கள் முன்னணி முக்கியஸ்தருமான மூ.கே.-யோ.வாஞ்சிநாதனின் ஒரே புதல்வன் இவன். இதனாலேயே இவனது நண்பர்கள் இவனை "வாஞ்சி" என்று அழைப்பார்கள். பயிற்சிக்குப் போக காலம் கடந்து போவதால் பொறுமையிழந்த இளஞ்செழியன் முல்லைத்தீவுக் காட்டிற்குள் பயிற்சிக்கென புதிய போராளிகளை ஏற்றிச் சென்ற படகில் கடற்பகுதிப் பொறுப்பாளருக்குத் தெரியாமல் ஏறிவிடுகின்றான். அப்போது அப்பொறுப்பாளர் வந்து அவனை இறக்க முற்பட்டபோது எப்படியும் நான் இதில் போகவேண்டுமென அடம் பிடித்து போய் விடுகின்றான்.

சென்ற வருடம் கோட்டையில் சண்டை உக்கிரமாக நடைபெற்றபோது, அவன் ஜி.பி.எம்.ஜி உடன் அங்கு நின்றான். மண்டைதீவு வரையும் வந்த இராணுவத்தினர் கோட்டை முகாம் இராணுவத்திற்கு ஆயித உதவி வழங்குவதற்கு பண்ணைக் கடல் வழியாக வந்தபோது சில நேரங்களில் இடுப்பளவும், சில நேரங்களில் மார்பளவும் உள்ள பண்ணைக் கடல் நீரில் இருந்து கொண்டு தாக்கிய விடுதலைப் புலி அணியில் இவனும் ஒருத்தனாக இருந்தான். ஆரம்பத்தில் ஜி.பி.எம்.ஜி லோடராக இருந்து பின் கண்ணராக மாறினான். இறுதியில் பிறண் கிடைக்கின்றது. கோட்டை இறுதித் தாக்குதலின் போது இவனது இயந்திரத் துப்பாக்கி ரவை மழை பொழிந்து எதிரியை ஓட வைத்தது. இத்தாக்குதலில் இவன், விரலில் காயப்படுகிறான்.

கோட்டை சண்டை முடிவடைந்ததும் விடுதலைப்புலிகளின் இராணுவத் திட்டமிடல் பிரிவில் கடமையாற்றினான். அந்த நேரத்தில் கூட இராணுவ காவலரண்களைப் போய் பார்த்து, அவற்றிற்கான மாதிரி செய்வதிலும் சிரத்தையுடன் ஈடுபட்டான். தச்சன் காட்டுச் சந்தி மினி முகாம், சிலாவத்துறை இராணுவ முகாம், காரைநகர் கடற்படை முகாம் ஆனையிறவு இராணுவ தளம் ஆகிய முகாம்களின் தாக்குதலுக்கான தயாரிப்பு வேலைகளில் திட்டமிடல் பகுதியிலிருந்த தனது கடமையை சிறப்பாகச் செய்தான்.

யாழ் மாவட்ட படைப்பிரிவுக்குக் கடமையாற்ற வந்தபோது இளஞ்செழியனுக்கு ஏ.கே.எல்.எம்.ஜி ஒன்று கொடுக்கப்பட்டது. பெரிதும் மகிழ்ச்சியடைந்த இளஞ்செழியன் அதற்குப் புதிய கோல்சர் ஒன்று தைத்து எப்போதும் அதனை அழகாகத் துடைத்து சுத்தம் செய்து கவனமாகப் பேணிப் பாதுகாத்து வைத்தான். படுக்கும் போது அதனைக் கட்டிப்பிடித்துக் கொண்டே படுப்பான். எங்கு சென்றாலும் அதனைக் கொண்டு திரிந்தான்.

ஆனையிறவு யுத்தம் தொடங்கியதும் அதற்குப் போக வேண்டுமென்று துடித்தான். அதன்படியே அந்த யுத்தத்தில் கலந்து கொண்டான். தனது ஏ.கே.எல்.எம்.ஜியினால் பல எதிரிகளை வீழ்த்தினான். யூலை திங்கள் 22ந் திகதி அன்று புல்லாவெளியில் அமைந்திருந்த இராணுவ காவலரண் மீதான தாக்குதலின்போது எதிரிக்கு மிகச் சமீபமாகச் சென்று இவன் தனது ஏ.கே.எல்.எம்.ஜியினை உயர்த்தியபோது எதிரியின் துப்பாக்கி ரவைகள் இவன் உடலைத் துளைத்துச் சென்றன. அந்த வீரன், மாவீரனாக இந்த மண்ணின் விடிவிற்காகய் வீரச்சாவை எய்தினான். அப்போது கூட ஏ.கே.எல்.எம்.ஜி மீதான அவன் பிடி தளரவில்லை.

புரட்சிப் பாடல்களை இசைத்துக் கொண்டு துப்பாக்கி ஏந்திவரும் இன்னுமொரு போராளியிடம் தனது ஆயுதத்தை ஒப்படைக்கத் தான் இறுகப் பிடித்தானோ....?

இவனது மரணம் இன்னொரு செய்தியையும் உலகிற்கு எடுத்துச் சொல்லியது. இந்தப் போராட்டத்தில் இரண்டு தலைமுறைகள் கலந்து கொண்டுள்ளன என்பதை, சீருடை அணிந்த மகனின் சடலத்திற்கு சீருடை அணிந்த தந்தை கொள்ளிவைத்ததை அப்படித்தான் வரலாறு சொல்லும் .

- கஸ்ரோ -

**போராடும் என் அன்பு மகள்**
**மனக்கண்ணில் தெரிகின்றாள்**

பூப்போன்ற உனது பாதங்கள்
பிஞ்சுக் கரங்கள்
மூந்த நாள்
நான் முத்தமிட்டமை
ஏங்கிக் கிடக்கும் தமிழினத்தின் விடிவிற்கு
காணிக்கை நான் கொடுத்தவை
எகிறிப் பாய்ந்து
பதினைந்தே வயதில்
எதிரியை நீ வீழ்த்துகிறாய்- அதோ
என் மனக் கண்ணில் தெரிகிறது!

மத்தியான வெய்யில்- வெறும்
மணல் மேட்டில்
சுட்டுப் பொசுக்கும் வெந்தழலில்
உணவை, உறவை
உறக்கத்தை நீ மறந்து
அப்பாவை, அம்மாவை
முத்தமிட்ட நாள் மறந்து- தமிழ்
மண்ணை முத்தமிட
தயங்காமல்
துப்பாக்கியோடு கவடுகள் நீ பதிக்கின்றாய்!
அதோ என் மனக் கண்ணில் தெரிகிறது!

என்ன துணிச்சலடி என் மகளே!
என் நெஞ்சம் விம்முகிறதே!
ஒரு கோடி வெடியதிர
அஞ்சாது முன் பாயும் புலி அணியில்- உன்
பஞ்சுப் பாதங்களிற்குத் தலைவன்
என்ன பலம் தந்தானோ!
அதோ என் மனக் கண்ணில் தெரிகிறது!

எகிறிப் பாயும் வேங்கைகள்
இடையிடையே
மண்ணை முத்தமிட்டுக் கிடக்கும் தியாகங்கள்
திரும்பும் திசையெல்லாம்
தியாகிகள் ஊர்கோலம்- தமிழ்
மண்ணெல்லாம் தோரணங்கள்
வீதிகளில் ஏக்கம் நிறைந்த முகங்களின்
தேக்கங்கள்
ஆனையிறவில் உரிமைப் போர்
வரலாற்றை மாற்றும் போர்
அங்கே என் அருமை மகளே
சீற்றம் கொண்ட பெண் புலியாய் -என்
மனக் கண்ணில் தெரிகின்றாய் !

உன் உறுதி நானறிந்தேன்
பெற்றதனால் பெருமை கொண்டேன்
உரம் பெற்ற தலைமையின் கீழ்
உணர்வுப் போர் புரிவதற்கு
உன் தம்பி, தங்கை தனை
தவறாமல் இணைத்திடுவேன்
வாழ்வதனை மானமதாய்
மாற்றிய உன் புலிக்கோலம்
அதோ என் மனக் கண்ணில் தெரிகிறது !
மனக் கண்ணில் தெரிகிறது !



# இலக்கியக் களம்

## குரு(தி)ஷேத்திரம்

அவர் ஒரு வாத்தியார். குடியேற்றத்தின் கொடுமையை அனுபவித்த மணலாறு மாவட்டத்தைச் சேர்ந்த இவரும், இவரைப் போல வாத்தியார் பணியில் ஈடுபடும் இவரது இன்னொரு சகோதரரும் துணைப்படையில் பயிற்சி பெற்றவர்கள். அந்த மண்ணின் தேவை கருதி தோளில் துப்பாக்கியுடனேயே பாடசாலைக்குச் செல்பவர்கள். இவரது இன்னொரு தம்பி 85 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இராணுவ முகாம் தாக்குதல் ஒன்றின்போது வீரமரணமெய்தி விட்டார். மற்றொரு தம்பி இப்போது போர் முனையில் உள்ளார். மொத்தத்தில் விடுதலைப் போராட்டத்தில் ஊறிய குடும்பம் அது.

வாத்தியாரிற்கு மூன்று பிள்ளைகள். இவர்களில் மூத்தவள் பெண் பிள்ளை. இவள் தனது பதினான்காம் வயதின் ஆரம்பத்திலேயே போராட்டத்தில் இணைந்து கொண்டாள். சமுத்திரத்தில் பிறந்த மீன் குஞ்சை தொட்டியில் வளர்க்க முடியுமா? வாத்தியாரும் மனப்பூர்வமாக வாழ்த்தி மகளுக்கு விடை தந்தார்.

இரு நாட்டுப் படைகளும் வாரக் கணக்கில் பொருதிய கட்டைக் காடு மோதலில் தனது மகளும் களத்தில் நிற்கிறாள் என்ற செய்தி வாத்தியாருக்குத் தெரிந்தது. மிகப் பெரிய மோதலில் மகள் பங்கேற்கிறாள் என்ற பெருமிதம் இருந்தாலும், நாளாந்தம் பத்திரிகையில் வரும் வீரமரணமெய்தியோர் பட்டியலையும், வைத்தியத்திற்காக வந்த காயமடைந்தோர் பட்டியலையும் பார்த்துக் கொள்வார். எல்லோருமே எமது பிள்ளைகள் - எமது சகோதரர்கள் என்ற உணர்விருந்தாலும் அப்பா என்ற அந்தஸ்தை அளித்த மகளைப் பற்றி - அவள் நிலையைப் பற்றி அறிந்து கொள்ளும் அவசரம் - துடிப்பு அவரிற்கு வராமல் விடுமா? இதை விட இந்த மண் எங்கும் தெரிந்த மாற்றங்கள்- உணர்வுகள் அவரையும் பாதித்தன. மகள் போர்க்களத்தில் நிற்கும் காட்சிதனை தன்மனக் கண்ணால் கண்டார். தன் உள்ளுணர்வுகளை எல்லாம் ஒரு கவிதையாய் வடித்தார். அதனை வானொலியில் ஒலிபரப்புவதற்காய் கொடுத்தார். அங்கிருந்து தனது தற்காலிக இருப்பிடத்திற்குத் திரும்பிய அவருக்கு ஒரு செய்தி காத்திருந்தது- " மகள் போர்க்களத்தில் காயமுற்று சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள். அப்பாவைப் பார்க்க ஆசைப் படுகிறாள்," என்பதே அது.

தானாடா விட்டாலும் தன் தசை ஆடும் என்பார்களே! ஒருகணம் ஆடித்தான் போய் விட்டார் வாத்தியார், மறுகணம் " அவள் ஒரு குழந்தை, எனது வாட்டம் அவளுக்குத் தெரிந்து விடக் கூடாது. அவளுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும் போராட்டத்தில் இணைந்து ஒரு வருடத்தின் பின் போர்க்களத்தில் போரிட அவளுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த முதல் தாக்குதலிலேயே காயமடைந்ததனால் பிள்ளை பயந்து போயிருப்பாள் ஆகவே, " பயப்படாதே மகளே விரைவில் சுகமாகும் என்றெல்லாம் கூற வேண்டும். " இவ்வாறெல்லாம் நினைத்தவாறே வைத்தியசாலைக்குள் காலடி எடுத்து வைத்தார். மகளின் அருகே சென்றார். மகளும் அப்பாவைக் கண்டு கொண்டாள். ஒரு கையால் அவரின் கரங்களைப் பற்றினாள்.

" அப்பா! " குரலின் வித்தியாசம் காயத்தின் தன்மையை வெளிப்படுத்தியது. தாடையெலும்பில் விழுந்த சூடு, வாய் திறந்து இயல்பாகப் பேச விடவில்லை. பற்களிற்கிடையே வரும் அந்த வித்தியாசமான வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்டார் வாத்தியார். "அப்பா...மனமாரச் சுட்டன் அப்பா,"...ஆறுதல் கூறப் போன வாத்தியாருக்கு மகளின் கூற்று மலைப்பைக் கொடுத்தது. ஆனத்தக் கண்ணீர் பெருகியது. அவர் மௌனியானார் மகள் தொடர்ந்தாள்" அப்பா... மனமாரச் சுட்டன் அப்பா. என்ர நீண்ட நாள் ஆசை இப்பதான் நிறைவேறிச்சு. இந்தத் தாக்குதலுக்கும் முதலில் என்னை விடேல்ல. நான் தான், நான் இயக்கத்துக்குச் சேர்ந்து சரியாக ஒரு வருசமாச்சு. இண்டைக்குச் சண்டைக்குப் போக எனக்குச் சந்தர்ப்பம் தர வேணும் எண்டு எங்கட குறூப் லீடரிட்ட சண்ட பிடிச்சன். சொர்ணம்மாமா தான் எங்கட குறூப் லீடர் என்ர எதிர்பார்ப்பு போலத் தான் சண்டையும் அமைஞ்சுது. கன ஆமிக்காறங்கள் செத்தாங்கள் அந்த ரவுண்ட்ஸ் மழையில எங்களிலையும் சில பேருக்கு காயம். எனக்கு வாயில வெடி, ஆனாலும் நான் சண்டை பிடிச்சன். அப்பா ஏனெண்டா இன்னும் வீரமாச் சண்டை பிடிக்க வேணும் எண்ட ஆவேசம் அப்ப எனக்கு இருந்தது. அப்பதான் கையில் சூடு விழுந்தது. ஆனாலும் ஒற்றைக் கையால் சுடத்தான் செய்தன் ஆனா, கொஞ்ச நேரஞ் செல்ல சோர்ந்து போனன்" - களத்தில் சாதித்தவை குறித்து பெருமிதத்துடனும், தொடர்ந்து அச் சாதனை தொடர உடல் நிலை இடங்கொடுக்கவில்லை என்பதைக் கவலையுடனும் கூறினாள்.

அவள் வார்த்தைகளில் அப்பா-மகள் உறவை விட இரு போராளிகளுக்கிடையிலான தோழமையே மேலோங்கி நின்றதை அவர் உணர்ந்தார். மகள் மீண்டும் தொடர்ந்தாள்." சொர்ணம்மாமா இந்தச் சண்டையில் காயப்பட்டிட்டாராம். அவர் எப்படி இருக்கிறார் எண்டு நான் பார்க்கவேணும்" - மகளின் கூற்றைக் கேட்டதும் "இல்லையம்மா நீ இருக்கிற நிலையில் எழும்பிப் போகேலாதம்மா", என்று சொன்னார் வாத்தியார். "சரி....அப்ப நீங்கள் கட்டாயம் போய் அவரைப் பார்க்க வேணும். பாத்திட்டு இப்ப எனக்கு வந்து அவரைப் பற்றிச் சொல்ல வேணும் கட்டாயம் என்னட்டச் சொல்லிப் போட்டுத் தான் போக வேணும்" -உத்தரவு போன்ற வார்த்தைகள் மகளிடமிருந்து ஒலித்தன. சின்னவயதிலிருந்தே அடம் பிடிக்கும் அவள் சுபாவம் இப்போது தேச விடுதலைக்காய் .....புல்லரித்துப் போனார் வாத்தியார். "இருபத்தைந்து வயது இளம் பெண்ணானாலும் கடைக்குச் செல்வதற்கு ஐந்து வயதுச் சிறுவனைத் துணைக்குக் கொண்டு செல்லும் வழக்கம், இருந்த இந்த மண்ணில் மௌனமாக இப்படி ஒரு புரட்சி ஏற்பட்டுள்ளது" - இவ்வாறு போர்க்களத்தில் எமது பெண் போராளிகள் நிகழ்த்தும் சாதனை குறித்து ஒரு பத்திரிகையாளர் கூறியதை அவர் நினைவு கூர்ந்தார். அன்றைய சந்திப்பின் போது இவ்வளவு காலமும் தான் சந்தித்த தளபதிகள் -போராளிகள் அனைவரையும் தமது மகள் வடிவத்தில் அவரால் காண முடிந்தது. இப்படி ஒரு மகளைப் பெற்றதற்காக பெருமையடைந்தார். இரவு அவர் எழுதிய கவிதை வானொலியில் ஒலிபரப்பாகியது. அதன் ஒவ்வொரு வரிகளும் சத்தியமான கூற்றாக அவர் மனதில் எதிரொலித்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சர்வதேசக் களம்

## கம்யூனிஸ சித்தாந்த போர்வையில் அடக்கப்பட்டிருந்த தேசிய இனங்கள் விழிப்படைகின்றன.

கம்யூனிஸம் என்ற போர்வையில் இதுவரை ரஸ்ஸிய பேரினவாதமே சோவியத் யூனியனை ஆட்டிப்படைத்து வந்தது. புதிதாகத் தோன்றிய கொமன்வெல்திலும் ஒரே இனத்தவகளான ரஸ்ஸியா, பெலோரஸ்ய, உக்ரேன் மேலதிக்கமே வெளிப்பட்டுள்ளது. ஜோர்ஜியர், ஆர்மேனியர், முஸ்ஸீம்கள் முன்பிருந்த கீழ்நிலையிலேயே ரஸ்ஸியர்களால் நடத்தப் படப் போகிறார்கள். பழைய சோவியத் யூனியன் காலத்தில் சகல பிரதேசங்களிலும் ரஸியர்களே பெரும்பதவிகளை வகிக்கித்தார்கள். இராணுவம், ஆயுதபலம் போன்றவற்றில் ரஸ்ஸிய இனத்தவர் பகுதியே பலம் வாய்ந்துள்ளது. ரஸ்ஸியப் பிரதேசத்தில் பிற மாநிலத்தவர்களது விகிதாசாரம் சிறுபான்மையாகவும் பிற மாநிலத்தில் ரஸ்ஸியர் தொகை சிறுபான்மையாக உள்ளது. மாக்ஸிஸம் இனவெறியை எதிர்க்கிறது எனக் கூறி ரஸ்ஸிய பேரினவாதத்தைத் திணித்து வந்த போலி மாக்ஸிஸ்டுகள் விரைவில் தாம் விதைத்த பேரின வெறியை அறுவடை செய்யப் போகிறார்கள்.

## சீனப் பிரதமரின் இந்திய விஜயம் சீனாவிற்கு பெரிய வெற்றி.

சீனப் பிரதமரின் விஜயத்தினால் ஸங்காயிலும், பம்பாயிலும் இருநாடு களின் பொருளாதார உறவுகள் விருத்தியடையக்கூடிய வகையிலான அந்தஸ்துள்ள ஸ்தானிகர் ஆலயம் முதல் தடவையாக 1962ற்குப் பிறகு திறக்கப்பட்டது. இச் சந்திப்பின் விளைவாக இந்தியாவின் செல்லப் பிள்ளையாக இருந்த தீபத்தை சீனாவிற்கு தாரை வார்த்துக் கொடுக்க இந்தியா சம்மதித்தது. இதுவரை தீபெத்தில் இடம் பெற்ற சீன எதிர்ப்பு முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்காது இந்திய வெளிவிவகார அமைச்சரின் வேண்டுகோளான பாகிஸ்தானுக்கான ஏவுகணை உதவி நிறுத்தப்பட வேண்டுமென்பதற்கு சீனப் பிரதமர் பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு ஆபத்து இருக்காது என்ற சுருக்கமான பதிலே கிடைத் தது. மனித உரிமைகள் பற்றிய மேற்கு நாடுகள் சித்தாந்தம் வளர்முக நாடுகளுக்கு ஏற்றதல்ல என்ற சீனப் பிரதமரின் கூற்றை இந்தியா மௌனமாகக் கேட்டது. பஞ்சாப் காஸ்மீர் பிர

தேசங்களில் இருந்து வரும் பதட்ட நிலையைப் பற்றி சீன மூச்சுக் கூட விடவில்லை, பொருளாதார தொழில்நுட்ப விடயங்களிலும் சீனாவிற்கு நல்வாய்ப்புக்களே உருவாகியுள்ளது. சீனா றால் போட்டு சுறாப் பிடிக்க இந்தியா சீனாவுடன் எவ்வழியிலாயினும் நட்புக் கிடைத்தால் போதும் என்று இருந்துவிட்டது. சீனப் பிரதமர் வெற்றிப் புன்னகையுடன் நாடு திரும்பினார்.

## அமெரிக்காவில் இனவாதம் தலை நீட்டுகிறது.

அமரிக்க அதிதீவிர வலதுசாரிகளின் ஆஸ்தான போதகர் புச்சானன் அமெரிக்க குடி வரவு சட்டம் திருத்தப்பட்டு, மூன்றாம் உலக நாட்டினர் வருகை தடை செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை மிகப் பலமாகப் பிரசாரம் செய்து வருகிறார். உலகில் கம்யூனிஸம் செத்து விட்டது. அமெரிக்கர்கள் இனி நாட்டுக்குத் திரும்பி உள்நாட்டு விவகாரத்தைச் சீர் திருத்தாவிடில் அமெரிக்கா பாதாளத்தில் விழுந்து விடும் என்றும், இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன் உலக விவகாரங்களில் தலையி டாமைக் கொள்கையைக் கடைப்பிடித்ததைப் போல் மீண்டும் கடைப் பிடிக்க வேண்டுமென்கிறார். மேலும் உலகின் பிரதேச வல்லரசுகள் அவ்வப் பிரதேச விவகாரங்களைக் கவனிக்கட்டும். எங்களை இனவெ றியர்கள் என யார் திட்டினாலும் கவலை கொள்ளத் தேவையில்லை என்கிறார். இவரது செல்வாக்கு பெருக ஆரம்பிப்பதாகக் கூறப்படுகிறது.

## ஊழல், மோசடி மன்னர்கள் பாடு கொண்டாட்டம் தான் - கம்போடியா

ஐ.நா சமாதானப் படைவீரர்கள் கம்போடியாவுக்குப் புதியவர்கள். ஏற்கனவே சீர் குலைந்திருக்கும் அரசியல் நிர்வாகத்தை இவர்களால் சரி செய்ய முடியவில்லை. முன்பிருந்த அரசியல் இயக்கங்கள் நிர்வா கத்தில் தலையிட முடியாது. தனியார் துறையை மீண்டும் அமுல்படுத்த முனைகையில் தான்தோன்றித்தனமாக அரச கட்டிடங்கள், தொழிற் சாலைகள், போக்குவரத்ததுச் சாதனங்கள் என்பன விற்பனையாகின் றன. பணம் அதிகாரிகளின் பைக்குள் போகின்றது. அரச உடமைகள் ஊழல் பேர்வழிகளினால் சூறையாடப்படுகிறது. இதை எதிர்த்து ஊர்வலம் போன மாணவர்களைச் சுட்டதில் எட்டுப் பேர் மரணம டைந்து பலர் காயமுற்றுள்ளனர். அமைதி உடன்பாடு சீர்குலைந்து விடுமே எனும் அளவிற்குப் பதட்ட நிலை உருவாகியுள்ளது. பல அதிகாரிகள் திடீர் பணக்காரரர் ஆகி விட்டனர். பிற நாட்டுச் சமாதானப் படை மூலம் அமைதி நிலை நாட்டும் நிலை தோன்றினால் ஐ.நா. சமாதானப் படையென்ன எந்த அமைதிகாக்கும் படையினாலும் இக் குழப்பமோ தோன்றுமென்பதற்குக் கம்போடியா மற்றுமொரு பாடமாகும்.

## இந்தியாவின் குடிசன அதிகரிப்பு பிரச்சனை

இந்தியாவின் தற்போதைய 855 மில்லியன் சனத்தொகை எதிர்வரும் 35 வருடங்களில் இரட்டிப்பாகிவிடும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. வருடாந்த அதிகரிப்பு மூலம் இரண்டு வீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.2000 அளவில் 1 பில்லியனை இந்தியக் குடித்தொகை அடைந்து விடுமென்றும் வெறும் நிலங்கள், மலைப் பிரதேசங்கள் யாவும் மக்க ளால் நிரப்பப்பட வேண்டிய நிலை ஏற்படுமென்றும் கூறப்படுகிறது. நகர்ப் புறங்களில் போக்குவரத்து மந்தகதி அடைந்து, கிராமிய வறுமை மேலோங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. 1971 தொடக்கம் பலாக்கார வழிகள் உட்பட பல வழிகள் பிரயோகிக்கப்பட்டும் அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியவில்லை. குடித்தொகைக் கட்டுப்பாட்டு சாதானங் கள் தாராளமான உற்பத்தி, பிரசாரம் முதலியன இந்தியாவில் வளர்ந் திருந்தாலும் இத் துறைகளில் காணப்படும் மோசடி ஊழல்களினால் கட்டுப்படுத்தல் முறை வெற்றியளிக்கவில்லையாம்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ராணுவம் அடாவடித்தனம் தீவைப்பு மாணவர்கள் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமிலிருந்து வெளி யேறிய இராணுவத்தினர் பாலை யடிச்சேனை என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்து நூறுக்கு மேற் பட்ட தமிழ் மக்களைப் பிடித்துச் சென்றுள்ளனர். இவர்களனைவ ரும் இராணுவத்தால் துன்புறுத் தப்பட்டனரெனவும், இவர்களில் இரண்டு ஆண்களும், மூன்று மாணவிகளும் தடுத்து வைக்கப் பட்டுள்ளனரெனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. இதேவேளை 19ம் கட்டை இரா ணுவ முகாமிலிருந்து முன்னேறி வந்த இராணுவத்தினர் நெடுஞ் சேனை, ஓதியங்குடா ஆறு, கண் சேனை அடைச்ச கல் ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்து 75ற்கும் மேற்பட்ட வீடுகளைத் தீ மூட்டி எரித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அப் பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்று, தொடர்ந்து இரண்டு மணி நேரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள் ளது. இப் பகுதியில் றொக்கட் மோட்டார் தாக்குதலும் 19-ம் கட்டை முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப் பட்டுள்ளன

## பலாலியை விஸ்தரிக்க இராணுவம் முயற்சி தடுத்து நிறுத்த புலிகள் தாக்குதல் வலிகிழக்கில் அகோர குண்டு வீச்சு

பலாலி விமான - இராணுவத் தளத்தை விஸ்தரிக்கும் முகமாக முகாமின் கிழக்குப் புறமாக இரா ணுவம் பெரும் தாக்குதல் நடவ டிக்கையில் இறங்கியுள்ளது. இரா ணுவத்தின் இந் நடவடிக்கைக்கு உதவியாகக் கடும் குண்டு வீச்சுத் தாக்குதலை விமானப்படை விமானங்கள் மேற்கொண்டு வரு கின்றன.

அதேவேளை இராணுவத்தின ரின் இவ் விஸ்தரிப்பு நடவடிக் கையைத் தடுத்து நிறுத்த விடு தலைப்புலிகள் எதிர்த்தாக்கு தலை மேற்கொண்டுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து இடைக்காடு, ஓட்டகப் புலப்பக் கமாகவும் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும், விடுத லைப்புலிகளுக்குமிடையில் இர ண்டு நாட்களாக மோதல்கள் இடம் பெற்றன.

விடுதலைப்புலிகளின் கடும் எதிர்த்தாக்குதலால் இராணுவத் தினரின் முன்னேறும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன.

இந்நிலையில் இராணுவத்தினர் தமது நிலைகளில் இருந்து தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களையும், கலிபர் தாக் குதல்களையும் நடாத்தி வருகின் றனர்.

## மண் மீட்பு நிதி....

மேல் எமக்கெதிரான போரில் செலவிட ஓதுக்கியுள்ளது. இது சிறீலங்கா அரசின் வரவு செலவுத் திட்டத்தில் 10 வீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

அதாவது மாதாந்தம் 125 கோடி ரூபா போர்ச்செலவிற்கு ஓதுக்கி யுள்ளது.

இன்னும் சொல்லப் போனால் நாளொன்றுக்கு நாலுகோடி ரூபாவைச் செலவு செய்து தமிழீழ மக்களுக்கெதிரான போரை நடாத்திக் கொண்டிருக்கின்றது.

போர் வெறிகொண்ட சிங்களப்ப டைகளிடமிருந்து எமது மக்களை விடுவிப்பதற்காக நாம் நடாத்தும் விடுதலைப் போரில் எவ்வளவு பணத்தைச் செலவு செய்கின் றோம்.?

அந்தப் பணத்தை எங்கிருந்து என்ன வழிமூலம் பெறலாம் என்ற கேள்விகளுக்கு உரிய பதில்களை எமது மக்களும் அறிந்து கொள்ள வேண்டும்.

சிறீலங்காவைப் பொறுத்தவரை அது ஒரு நாடாகும். அந்நாட்டின் அரசு தனது இராணுவச் செலவு களை தனது வருமானத்தில் இருந்து பெற்றுக் கொள்கின்றது.

ஒரு அரசின் வருமானமென்பது அந்த நாட்டு மக்களிமிருந்து பெறப்படும் பல்வேறுவிதமான வரிப்பணங்கள் உட்பட அந்த நாட்டின் வளம், அந்த மக்களின் உழைப்பின் ஒரு பகுதி ஆகியவற் றில் இருந்தும் பெறப்படுக்கின்றது.

அத்துடன் ஒரு அரசு என்ற ரீதி யில் வெளிநாடுகளிடமிருந்து கடனாகவும், அன்பளிப்பென்ற கோதாவிலும் தனது நிர்வாக இராணுவச் செலவினங்களுக்கு ரிய பணத்தைத் தேடிக்கொள்கின் றது. இந்தப் பணத்தில் இருந்து தான் அது போர் விமானங்கள், போர்க்கப்பல்கள், பீரங்கிகள், எறிகணைகள்,ரவைகள் போன் றவற்றைக் கொள்வனவு செய்தும், தனது படைப்பலத்தைப் பெருக் கியும் தமிழீழத்திற்கெதிரான போரைத் தொடர்கின்றது.

இப்போரில் இருந்து நாம் விலகி இருக்க முடியாது. இது எமது இனத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு வரலாற்று நிர்ப்பந்தம், இப் போரை நாம் எதிர்கொண்டே ஆக வேண்டும்.எதிரியை எமது நிலங்களிலிருந்து விரட்டி எமது மக்களைப் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் வாழ வைக்க வேண்டும். எனவே நாமும் எதி ரியைப் போன்று படைப்பலத் தைப் பெருக்க வேண்டும். அதன் பொருட்டு பெருந்தொகையில் நிதியையும் திரட்ட வேண்டும்.

அப்படியாயின் இந்நிதிக்கு நாம் எங்கே போவது?

ஒரு அரசுக்கு இருப்பது போன்று வசதிகளும், வாய்ப்புகளும் எமக் கில்லை. ஆனால் விடுவிக்கப் பட்ட நிலத்தில் நாம் ஒரு அர சைப் போன்றே செயற்படுகின் றோம். எனினும் நாம் ஒரு அரசை இன்னமும் அமைக்கவில்லை. அதனால் ஒரு அரசுக்குரிய வரு மானங்கள் எமக்கு இல்லை.

மேலும் தமிழீழம் நல்லவளம் உள்ள நிலம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எமது மக் களும் நல்ல உழைப்பாளிகள் என் பதும் அனைவரும் அறிந்ததே. ஆனால் ஒருபுறம், போர்ச்சூழல் காரணமாக அந்த வளத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளது. இன் னொருபுறம் அந்த வளத்தைப் பயன்படுத்த விடாது எதிரி தடுக் கின்றான்.

இதனால் எமது மூல வளங்களி லிருந்து எமது போராட்டத்திற்கு தேவையான நிதியை ஈட்டிக் கொள்வது முடியாததாகிவிடுகின் றது.

அத்துடன் சர்வதேச, பிராந்திய அரசியல் சூழல் காரணமாவும் தமிழீழம் ஒரு நாடாகவும் பரிண மிக்காததாலும் வெளிநாடுகளிட மிருந்து நிதி உதவிகளைப் பெற் றுக்கொள்வதும் சாத்தியமற்றதாகி விடுகின்றது.

ஆரம்பத்தில், ஒரு சிறிய கரந்த டிப்படையணியாக நாம் இருந்த போது எமக்கு பெருமளவில் நிதி தேவைப்படவில்லை. அதனால் நிதிக்கான வேண்டுகோள்களை மக்களிடம் விடுக்கவுமில்லை.

பெரும் வளர்ச்சி கண்ட எமது படையணியை மேலும் கட்டி வளர்த்து அதைப் பராமரிப்பது டன் அப்படைக்குத் தேவையான படைக்கல வசதிகளையும் நாம் பெறவேண்டியுள்ளது. இத்துடன் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சட் டம் - ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பும் எம்முடையதே. அர சியல் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவும் இன்னோரன்ன நிர்வாகச் செலவுகளுக்குமாக பெருந்தொகையில் பணம் தேவைப்படும்.

இன்றைய நிலையில் மாதாந்தம் 8 கோடி ரூபாவிற்கும் மேற்பட்ட தொகையை நாம் போராட்ட நடவடிக்கைகளுக்காகச் செலவு செய்து வருகின்றோம். இது எமக் கெதிரான போரில் எதிரி பயன்ப டுத்தும் தொகையில், பதினைந் தில் ஒரு பங்கு என்பது குறிப்பி டத்தக்கது.

இத்தொகையானது மிக மிகக் குறைந்ததொன்றாகும். இத்தொ கையைப் பலமடங்காக அதிக ரிக்க வேண்டிய தேவை எழுந்து விட்டது.

இன்று சிங்களப்படைகள் ஆயுத பலத்தில் எம்மை விட பல மடங்கு உயர்ந்து நிற்கின்றன. அவனிடம் விமானப்படையும், கடற்படையும் இருப்பது ஒரு புற மிருக்க அவை மூலம் குண்டுக ளையும், ரவைகளையும் வெள்ளம் போல எதிரி எம்மீது வீசிக்கொண் டிருக்கின்றான்.

எதிரியின் இந்தப் படைக்கலச் சக்திக்கு நாமும் ஈடுகொடுக்க வேண்டும். அப்படியாயின் எமது போராட்டச் செலவுகளையும் பன் மடங்கு அதிகரிக்க வேண்டும். இராணுவ உபகரணங்களினதும், வெடிமருந்துகளினதும் விலை சாதாரண மக்களால் கற்பனை செய்ய முடியாதளவுக்கு அதிக மானது.

**ஏ.கே.ரக துப்பக்கி ஒன்று 15,000 ரூபா**
**இதற்குப்பயன்படுத்தப்படும்ரவை ஒன்று 10 ரூபா**
**ஆர்.பி.ஜி. ஒன்று 40,000 ரூபா**
**இதற்குப்பயன்படுத்தப்படும் எறி கணை 12,000 ரூபா**
**சாதாரண எறிகணை ஒன்று 5,000 ரூபா**
**விமான எதிர்ப்புத் துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் ரவை ஒன்று 800 ரூபா**
**ஒரு ஜொனி மிதிவெடியைத் தயா ரிக்க**
**ஆகும் செலவு 200 ரூபா**
**கடலில் நாம் பயன்படுத்தும் பட கின்**
**விலை. 25 இலட்சம்.**
**"டோரா" சண்டைப்படகு ஒன்று 5 கோடி ரூபா.**

தொடர்ச்சி 7ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிகழ்வும் நினைவும்

**- திலீபன் -**

"நிகழ்வும் நினைவும் " எனும் இப் பகுதியினூடாக ஒவ்வொரு 'களத்தின்' இதழ் மூலமும் உங்களோடு கருத்துப் பரிமாற முன் வருகின்றேன்.
அரசியல், சமூகம், கலை, பொருளாதாரம் சார்ந்த விடயங்களில் தமிழ்த் தேசிய நலன் என்ற நோக்கு நிலையில் இருந்து எனது கருத்துக்களை உங்கள் முன் வைக்க உள்ளேன். இதில் 'நடு நிலைமை ' என்று ஏதும் இருக்கப் போவதில்லை. எனது கருத்துக்கள் தமிழ்த் தேசிய நலனின் பக்கம் சார்ந்தே விளங்கும். தேசிய வாதம் பேசுபவன் பிற் போக்குவாதி என எவராவது கருதுவாராயின் அவர்களையும் கருத்து முனையில் இப் பகுதியில் சந்திக்கத் தயாராகவே உள்ளேன்.
இப் பகுதி குறித்து உங்கள் அபிப்பிராயத்தை தாராளமாக எழுதுங்கள்.
எனது கருத்துக்களுடன் உங்களுக்கு முரண்பாடுகள் இருப்பின் அவற்றையும் இப் பகுதியில் விவாதிப்போம்.
கருத்து சார்ந்த விவாதம் என்றும் ஆரோக்கியமானதே.
இப் பகுதியில் நான் வெளியிடும் கருத்துக்கள் அனைத்துக்கும் நானே பொறுப்பு.
உங்களின் பங்கு பற்றலும் இவ் "நிகழ்வும் நினைவும்" பகுதிக்கு வளம் சேர்க்கும்.

### மீண்டும் இலங்கை இந்திய ஒப்பந்தமா?

*இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு 1987 ம் ஆண்டு ஆடி மாதம் 29ம் திகதி செய்து கொள்ளப் பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை அமுல் செய்வதே ஒரே வழியென இந்தியா சிறிலங்காவிடம் வலியுறுத்தியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.*

*இதற்கு சிறிலங்காவும் எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை யென்றும் கூறப் படுகின்றது.*
*இந் நிகழ்வினை யொட்டிய சில நினைவுகளை இன்று நோக்குவோம்.*
*இந்திய-இலங்கை ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையிலானதேயன்றி இனப் பிரச்சினையின் முரண்பாட்டுப் பகுதியினருக்கிடையிலானது அல்ல.*
*இதுவே இவ் வொப்பந்தத்தின் அடிப்படைக் குளறுபடியாகும். இது போன்ற பல குளறுபடிகளால் ஏற்கனவே இவ் வொப்பந்தம் 'மரண அடி ' வாங்கி மரணித்து விட்டது.*

*இவ்வாறு மரணித்துவிட்ட ஒப்பந்தத்துக்கு இன்று உயிர் கொடுக்க நினைப்பது மரணித்த மனிதனை உயிர்த்தெழ வைக்கும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.*
*மரணித்தவர் உயிர்பெற்றெழ இது நாயன்மார் வாழும் காலமல்ல. அற்புதங்கள் ஏதும் நிகழ்ந்துவிட வரலாறு, புராண இதிகாசமும் அல்ல.*
*இவ்வொப்பந்தத்துக்கு மீண்டும் உயிர் கொடுக்க முயலும் இந்தியா, முதலில் இவ் ஒப்பந்தம் ஏற்கனவே தோல்வியினைத் தழுவியதற்கான காரணங்களை நன்கு ஆராய்ந்திருக்க வேண்டும்.*
*இத் தோல்விக்கான காரணங்கள் குறித்த இந்தியாவின் சுய விமர்சனம் ஒன்றினைச் செய்திருக்க வேண்டும்.*
*ஒப்பந்தம் குறித்த இந்தியாவின் இன்றைய நிலைப்பாட்டை நோக்கும்போது அப்படி ஏதும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.*
*தோல்விகளில் இருந்து பாடம் படிப்பதென்பது பாரதப் 'பண்டிதர்' களுக்கு தேவையற்ற நடைமுறையோ என்னவோ?*

### ஏன் இந்தத் தோல்வி?

*இந்திய-இலங்கை ஒப்பந்தம் பரிதாபகரமான தோல்வியினை ஏன் தழுவிக் கொண்டது ?. விடையோ மிகச் சுலபம்.*
*இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறி மேற்கொள்ளப்பட்ட இவ் வொப்பந்தத்தை தமிழர் தரப்பும் ஆதரிக்கவில்லை. சிங்களவர் தரப்பும் ஆதரிக்கவில்லை. முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கான திட்டம் ஒன்றினை முரண்பாட்டின் பகுதியினர் ஆதரிக்காவிட்டால், அத் திட்டம் எப்படி வெற்றி பெறமுடியும் ?.*
*இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் தோல்விக்கு இதுவே தான் காரணம்.*
*இவ் வொப்பந்தம் தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களைப் பேணவில்லை என்பது தமிழர்களின் எதிர்ப்புக்குக் காரணம்.*

*தமிழர்களுக்கு உரிமைகளை இவ் ஒப்பந்தம் அள்ளிக் கொடுத்துவிட்டது என்பது சிங்களவர்களின் எதிர்ப்புக்கு ஒரு காரணம். இம் முரண்பட்ட நிலையே இலங்கைத் தீவின் இன முரண்பாட்டின் ஆழத்தைக் காட்டுகிறதல்லவா ?.*
*இம் முரண்பாட்டினை இந்திய- இலங்கை ஒப்பந்தத்தால் ஒட்டுப் போட முடியாது. தமிழ்த் தேசிய நலன் என்ற நோக்கு நிலையில் இருந்து பார்க்கும் போது தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை இவ் ஒப்பந்தம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பது தெளிவாகவே புரிகிறது.*

*நாற்பதாண்டு காலம் மனித உரிமை மீறல்களுக்கும், அடக்கு முறைகளுக்கும் உள்ளாகி வந்த தமிழ்த் தேசிய இனத்திற்கு இவ் ஒப்பந்தம் எவ்வித நன்மைகளையும் பெற்றுத் தரவில்லை. மாறாகச் சிறிலங்காவின் ஒற்றையாட்சி அமைப்பினுள் தமிழ்த் தேசிய இனத்தினைக் கட்டிப் போடும் பணியினையே இவ் ஒப்பந்தம் செய்ய முனைந்தது.*

### ஒப்பந்தத்தின் வடுக்கள்.

*இவ் ஒப்பந்தம் தமிழ் மக்களின் நெஞ்சில்மாறா வடுக்களை உண்டு பண்ணியது என்பது கடந்த கால வரலாறு பகரும் உண்மையாகும்.*
*இவ் வடுக்கள் எம் நெஞ்சில் இருந்து என்றும் அகன்றுவிடப் போவதில்லை.*
*ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை நிறைவேற்றக் கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்ட திலீபனை நாம், ஒப்பந்தத்தின் பெயரால் இழக்க வேண்டியதாயிற்று.*
*தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகளையும் இவ் ஒப்பந்தமே விழுங்கியது.*
*6000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்படவும், ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகவும், நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வன் முறைக்குட்படுத்தப்படவும், தமிழ் மக்களின் கோடிக் கணக்கான சொத்துக்கள் அழிக்கப்படவும் இவ் ஒப்பந்தமே வழிகோலியது.*
*600 க்கும் மேற்பட்ட போராளிகள் வீர மரணத்தைத் தழுவிக் கொள்ளவும் ஆயிரக் கணக்கான இந்திய இராணுவத்தினர் உயிரிழக்கவும் இவ் ஒப்பந்தமே காரணமாயிற்று.*
*ஒட்டு மொத்தமாக நோக்கின், தமிழீழ மண்ணில் இரத்த ஆறு ஓடுவதற்கும், பல அழிவுகள் ஏற்படுவதற்கும் வழி வகுத்ததே இவ் ஒப்பந்தத்தின் சாதனையாகும். இத்தகைய சாதனைகளை தன்னகத்தே கொண்டிருக்கும் இவ் ஒப்பந்தத்தை மீண்டும் இனப்பபிரச்சனைக்குத் தீர்வாகக் கொள்ளுமாறு இந்தியா வலியுறுத்துவதேன்?*
*இலங்கைத்தீவின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீண்டும் அமுல் படுத்துவது சாத்தியமானதல்ல என்பது இந்தியாவுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. இருந்தும் ஏன் இந்தப் பிடிவாதம்?*

## மண் மீட்பு நிதி....

*இவை தவிர நாம் கடற்சண்டைகளையும் எதிர்கொள்கின்றோம். ஒரு கடற்சண்டைக்குத் தேவையான - ஆயுத தளபாடங்கள் மிக மிகப் பெறுமதியானவை. சாதாரணமாக இன்று நாம் பயன்படுத்தும் ஒரு படகின் விலை 25 லட்சம். இப்படி எத்தனையோ படகுகளை இழந்துதான் நாம் பயணம் செல்கின்றோம். சதாரணமாக கடற்சண்டைகளில், தரைப்படைக்குப் பயன்படுத்தப்படும் ஏ.-கே.ரக சுரிகுழல் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதில்லை. அதற்கு மிக நவீன ரக ஆயுதங்கள் வேண்டும். அவை மிகப் பெறுமதியானவை.எனினும் அவற்றை நாம் பெறத்தான் வேண்டும். அவற்றைப் பெற்று எமக்கென்றொரு நவீன கடற்படையைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் உண்டு.*

*சிறீலங்கா கடற்படையினர் வைத்திருக்கும் "டோரா" எனப்படும் ஒரு சண்டைப்படகின் விலை 5 கோடி ரூபாவாகும். கடலில் நாம் எதிரியுடன் போரிடவேண்டுமாயின் இத்தகைய சண்டைப் படகுகளை நாமும் வைத்திருக்கத் தான் வேண்டும்.*

*இவ்வாறாக இராணுவ செலவினங்களை அதிகரித்த படிதான் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கிச் செலுத்த முடியும்.*

## படையெடுப்பை....

** உணவு நெருக்கடியை இயன்றவரை தவிர்ப்பதற்காக இன்றிலிருந்தே உலர் உணவுகளை தயாரித்து சேமிக்கவேண்டும்.*

** வதந்திகளைக் கட்டுப்படுத்தி அனாவசிய இடம்பெயர்வுகளை தடுத்து செயற்கையாக ஏற்படும் நெருக்கடிகளை நீக்கவேண்டும். அதற்காக ஊர்கள்தோறும் தொடர்பாளர்களை நியமித்து உடனுக்குடன் செய்திகளையும், அறிவுறுத்தல்களையும் பரிமாறி மக்களை உறுதியாக வைத்திருந்து அவர்களை வழி நடாத்த வேண்டும்.*

> "நாம் சமாதானக் கதவைத் திறந்து விட்டிருக்கின்றோம். ஆனால், சிறீலங்கா அரசு போர் முரசு கொட்டுகின்றது. எம்மை இராணுவ ரீதியாகப் பலமிழக்கச் செய்து-பேச்சுவார்த்தை மேடைக்கு இழுத்து "அரைகுறைத் தீர்வுகளைத்" திணித்து விடலாம் என்பதுதான் அவர்களின் நோக்கம்"

** இரத்ததானம் வழங்குவதற்கும், காயமடையும் போராளிகளையும் - மக்களையும் பராமரிப்பதற்கும் ஒரு பராமரிப்பாளர்படை உருவாக்கப்பட வேண்டும்.*

** தேவையான பகுதிகளில் விழிப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்டு எமது போராளி ஒருவரின் தலைமையில் கண்காணிப்புக்கள் நடைபெறவேண்டும்.*

** எல்லாவற்றிற்கும் மேலாக போர் முனையில் காயமடையும் - வீரமரணமடையும் புலிவீரர்களது இடத்தை உடனடியாகவே நிரப்பி சண்டையை வெற்றிகரமாக நடாத்த இளைஞர்களும், இளம் பெண்களும் எமதுபடையில் சேர்ந்து கொள்ளவேண்டும்.*

*எதிரி நினைக்கின்றான், எமது கோட்டைக்குள் புகுந்து அங்கேயே எமக்கு சமாதி கட்டிவிட முடியுமென்று, ஆனால் வாசலில் வைத்தே எதிரியின் அழிவுகளைக்கொண்டே, அரணமைக்க நாங்கள் தயாராக இருப்போம்.*

*அதற்காக ஆண் - பெண் என்ற பேதமின்றி, வயதுவேறுபாடின்றி போர்க்கள வேலைகளில் பங்கெடுத்து எதிரியின் படை எடுப்பை முறியடிப்பதன் மூலம் போராட்டத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தி விடுவோம்.*

***"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"***

**அன்புடன்**

கோ. மகேந்திரராசா.

## குடாநாட்டுக்கு வெளியே பரவலான தாக்குதல்கள்

*தமிழீழ விடுதலைப்புலிகளின் எல்லைக்காவல் படையின் விசேட அதிரடிப்படையினர் வவுனியாவில் மேற்கொண்ட தாக்குதலில் 8 இராணுவத்தினர் காணாமல் போயுள்ளனர். இவ் வெற்றிகரமான தாக்குதலின் போது ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.*

### குச்சவெளியில்

*சாம்பல் தீவை நோக்கி குச்சவெளியில் இருந்து தரை நகர முயன்ற இராணுவத்தினர் மீது இறுக் கண்டியில் வைத்து விடுதலைப்புலிகள் வழி மறித்து தாக்குதல் நடாத்தினர். இதில் 3LMG, 4 எறிகணைச் செலுத்திகள், 27 ஏ.கே ரகத் துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டன.*

### மாமடுவில்

*மாமடுவில் பத்தாசிக்குளம் இராணுவக்காவல் அரண் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் 3 படையினர் பலி எனவும் 5 பேர் படுகாயம் அடைந்தனர் எனவும் சிறிலங்கா அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.*

### மட்டக்களப்பில்

*மட்டக்களப்பு நாவற்குடாப் பகுதியிலுள்ள முஸ்லீம் ஊர்காவற் படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஊர்காவல்படையினரின் காவலரண் ஒன்று அழிக்கப்பட்டது. முஸ்லீம் கிராமங்களை ஊடுவிச்சென்று தாக்குதலை வெற்றிகரமாக முடித்த புலிகள் இருளின் ஊடே அவ்விடத்தை விட்டு அகன்று வெற்றிகரமாகத் தம் நிலைகளுக்குத் திரும்பினர்.*

### மன்னாரில்

*மன்னார்ப்பகுதியில் ஆங்காங்கே மோதல்கள் நடைபெறுகின்றன. பல இராணுவத்தினர் புலிகளின் சினைப்பர் கண்ணி வெடிகளில் சிக்கி கால்களை இழந்துள்ளதாக தெரிய வருகிறது.*

*இவ்விதமாக தமிழீழ மெங்கும் புலிகள் பரவலாக மேற்கொள்ளும் தாக்குதல்கள் புலிகள் தமிழீழமெங்கும் செறிந்து காணப்படுவதை ஊர்ஜிதப்படுத்துகின்ற அதேவேளை குடாநாட்டு முற்றுகையால் இலங்கை அரசு தமிழ்த்தேசிய இனப்போரை வெல்லமுடியாது என்பதை உறுதி செய்துள்ளது.*

* *"பேச்சுவார்த்தைக்கு நீங்கள் வரலாம். உகந்த ஒழுங்குகளை நாங்கள் செய்வோம்."*
தொண்டமானுக்கு புலிகள் கடிதம்

* "இரண்டு, மூன்று மாதங்களில் வடபகுதியை சிங்களப் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவர்."
*- சிறிலங்கா முப்படைத் தளபதி கமில்டன் -*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிகழ்வும் நினைவும்

**- திலீபன் -**

"நிகழ்வும் நினைவும் " எனும் இப் பகுதியினூடாக ஒவ்வொரு 'களத்தின்' இதழ் மூலமும் உங்களோடு கருத்துப் பரிமாற முன் வருகின்றேன்.
அரசியல், சமூகம், கலை, பொருளாதாரம் சார்ந்த விடயங்களில் தமிழ்த் தேசிய நலன் என்ற நோக்கு நிலையில் இருந்து எனது கருத்துக்களை உங்கள் முன் வைக்க உள்ளேன். இதில் 'நடு நிலைமை ' என்று ஏதும் இருக்கப் போவதில்லை. எனது கருத்துக்கள் தமிழ்த் தேசிய நலனின் பக்கம் சார்ந்தே விளங்கும். தேசியவாதம் பேசுபவன் பிற் போக்குவாதி என எவராவது கருதுவாராயின் அவர்களையும் கருத்து முனையில் இப் பகுதியில் சந்திக்கத் தயாராகவே உள்ளேன்.
இப் பகுதி குறித்து உங்கள் அபிப்பிராயத்தை தாராளமாக எழுதுங்கள்.
எனது கருத்துக்களுடன் உங்களுக்கு முரண்பாடுகள் இருப்பின் அவற்றையும் இப் பகுதியில் விவாதிப்போம்.
கருத்து சார்ந்த விவாதம் என்றும் ஆரோக்கியமானதே.
இப் பகுதியில் நான் வெளியிடும் கருத்துக்கள் அனைத்துக்கும் நானே பொறுப்பு.
உங்களின் பங்கு பற்றலும் இவ் "நிகழ்வும் நினைவும்" பகுதிக்கு வளம் சேர்க்கும்.

### மீண்டும் இலங்கை இந்திய ஒப்பந்தமா?

*இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு 1987 ம் ஆண்டு ஆடி மாதம் 29ம் திகதி செய்து கொள்ளப் பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை அமுல் செய்வதே ஒரே வழியென இந்தியா சிறிலங்காவிடம் வலியுறுத்தியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.*

*இதற்கு சிறிலங்காவும் எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை யென்றும் கூறப் படுகின்றது.*
*இந் நிகழ்வினை யொட்டிய சில நினைவுகளை இன்று நோக்குவோம்.*
*இந்திய-இலங்கை ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையிலானதேயன்றி இனப் பிரச்சினையின் முரண்பாட்டுப் பகுதியினருக்கிடையிலானது அல்ல.*
*இதுவே இவ் வொப்பந்தத்தின் அடிப்படைக் குளறுபடியாகும். இது போன்ற பல குளறுபடிகளால் ஏற்கனவே இவ் வொப்பந்தம் 'மரண அடி' வாங்கி மரணித்து விட்டது.*

*இவ்வாறு மரணித்துவிட்ட ஒப்பந்தத்துக்கு இன்று உயிர் கொடுக்க நினைப்பது மரணித்த மனிதனை உயிர்த்தெழ வைக்கும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.*
*மரணித்தவர் உயிர்பெற்றெழ இது நாயன்மார் வாழும் காலமல்ல. அற்புதங்கள் ஏதும் நிகழ்ந்துவிட வரலாறு, புராண இதிகாசமும் அல்ல.*
*இவ்வொப்பந்தத்துக்கு மீண்டும் உயிர் கொடுக்க முயலும் இந்தியா, முதலில் இவ் ஒப்பந்தம் ஏற்கனவே தோல்வியினைத் தழுவியதற்கான காரணங்களை நன்கு ஆராய்ந்திருக்க வேண்டும்.*
*இத் தோல்விக்கான காரணங்கள் குறித்த இந்தியாவின் சுய விமர்சனம் ஒன்றினைச் செய்திருக்க வேண்டும்.*
*ஒப்பந்தம் குறித்த இந்தியாவின் இன்றைய நிலைப்பாட்டை நோக்கும்போது அப்படி ஏதும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.*
*தோல்விகளில் இருந்து பாடம் படிப்பதென்பது பாரதப் 'பண்டிதர்' களுக்கு தேவையற்ற நடைமுறையோ என்னவோ?*

### ஏன் இந்தத் தோல்வி?

*இந்திய-இலங்கை ஒப்பந்தம் பரிதாபகரமான தோல்வியினை ஏன் தழுவிக் கொண்டது ?. விடையோ மிகச் சுலபம்.*
*இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறி மேற்கொள்ளப்பட்ட இவ் வொப்பந்தத்தை தமிழர் தரப்பும் ஆதரிக்கவில்லை. சிங்களவர் தரப்பும் ஆதரிக்கவில்லை. முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கான திட்டம் ஒன்றினை முரண்பாட்டின் பகுதியினர் ஆதரிக்காவிட்டால், அத் திட்டம் எப்படி வெற்றி பெறமுடியும் ?.*
*இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் தோல்விக்கு இதுவே தான் காரணம்.*
*இவ் வொப்பந்தம் தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களைப் பேணவில்லை என்பது தமிழர்களின் எதிர்ப்புக்குக் காரணம்.*

*தமிழர்களுக்கு உரிமைகளை இவ் ஒப்பந்தம் அள்ளிக் கொடுத்துவிட்டது என்பது சிங்களவர்களின் எதிர்ப்புக்கு ஒரு காரணம். இம் முரண்பட்ட நிலையே இலங்கைத் தீவின் இன முரண்பாட்டின் ஆழத்தைக் காட்டுகிறதல்லவா ?.*
*இம் முரண்பாட்டினை இந்திய- இலங்கை ஒப்பந்தத்தால் ஒட்டுப் போட முடியாது. தமிழ்த் தேசிய நலன் என்ற நோக்கு நிலையில் இருந்து பார்க்கும் போது தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை இவ் ஒப்பந்தம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பது தெளிவாகவே புரிகிறது.*

*நாற்பதாண்டு காலம் மனித உரிமை மீறல்களுக்கும், அடக்கு முறைகளுக்கும் உள்ளாகி வந்த தமிழ்த் தேசிய இனத்திற்கு இவ் ஒப்பந்தம் எவ்வித நன்மைகளையும் பெற்றுத் தரவில்லை. மாறாகச் சிறிலங்காவின் ஒற்றையாட்சி அமைப்பினுள் தமிழ்த் தேசிய இனத்தினைக் கட்டிப் போடும் பணியினையே இவ் ஒப்பந்தம் செய்ய முனைந்தது.*

### ஒப்பந்தத்தின் வடுக்கள்.

*இவ் ஒப்பந்தம் தமிழ் மக்களின் நெஞ்சில்மாறா வடுக்களை உண்டு பண்ணியது என்பது கடந்த கால வரலாறு பகரும் உண்மையாகும்.*
*இவ் வடுக்கள் எம் நெஞ்சில் இருந்து என்றும் அகன்றுவிடப் போவதில்லை.*
*ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை நிறைவேற்றக் கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்ட திலீபனை நாம், ஒப்பந்தத்தின் பெயரால் இழக்க வேண்டியதாயிற்று.*
*தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகளையும் இவ் ஒப்பந்தமே விழுங்கியது.*
*6000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்படவும், ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகவும், நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வன் முறைக்குட்படுத்தப்படவும், தமிழ் மக்களின் கோடிக் கணக்கான சொத்துக்கள் அழிக்கப்படவும் இவ் ஒப்பந்தமே வழிகோலியது.*
*600 க்கும் மேற்பட்ட போராளிகள் வீர மரணத்தைத் தழுவிக் கொள்ளவும் ஆயிரக் கணக்கான இந்திய இராணுவத்தினர் உயிரிழக்கவும் இவ் ஒப்பந்தமே காரணமாயிற்று.*
*ஒட்டு மொத்தமாக நோக்கின், தமிழீழ மண்ணில் இரத்த ஆறு ஓடுவதற்கும், பல அழிவுகள் ஏற்படுவதற்கும் வழி வகுத்ததே இவ் ஒப்பந்தத்தின் சாதனையாகும். இத்தகைய சாதனைகளை தன்னகத்தே கொண்டிருக்கும் இவ் ஒப்பந்தத்தை மீண்டும் இனப்பபிரச்சனைக்குத் தீர்வாகக் கொள்ளுமாறு இந்தியா வலியுறுத்துவதேன்?*
*இலங்கைத்தீவின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீண்டும் அமுல் படுத்துவது சாத்தியமானதல்ல என்பது இந்தியாவுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. இருந்தும் ஏன் இந்தப் பிடிவாதம்?*

## மண் மீட்பு நிதி....

*இவை தவிர நாம் கடற்சண்டைகளையும் எதிர்கொள்கின்றோம். ஒரு கடற்சண்டைக்குத் தேவையான - ஆயுத தளபாடங்கள் மிக மிகப் பெறுமதியானவை. சாதாரணமாக இன்று நாம் பயன்படுத்தும் ஒரு படகின் விலை 25 லட்சம். இப்படி எத்தனையோ படகுகளை இழந்துதான் நாம் பயணம் செல்கின்றோம். சதாரணமாக கடற்சண்டைகளில், தரைப்படைக்குப் பயன்படுத்தப்படும் ஏ.-கே.ரக சுரிகுழல் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதில்லை. அதற்கு மிக நவீன ரக ஆயுதங்கள் வேண்டும். அவை மிகப் பெறுமதியானவை.எனினும் அவற்றை நாம் பெறத்தான் வேண்டும். அவற்றைப் பெற்று எமக்கென்றொரு நவீன கடற்படையைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் உண்டு.*

*சிறீலங்கா கடற்படையினர் வைத்திருக்கும் "டோரா" எனப்படும் ஒரு சண்டைப்படகின் விலை 5 கோடி ரூபாவாகும். கடலில் நாம் எதிரியுடன் போரிடவேண்டுமாயின் இத்தகைய சண்டைப் படகுகளை நாமும் வைத்திருக்கத்தான் வேண்டும்.*

*இவ்வாறாக இராணுவ செலவினங்களை அதிகரித்த படிதான் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கிச் செலுத்த முடியும்.*

## படையெடுப்பை....

** உணவு நெருக்கடியை இயன்றவரை தவிர்ப்பதற்காக இன்றிலிருந்தே உலர் உணவுகளை தயாரித்து சேமிக்கவேண்டும்.*

** வதந்திகளைக் கட்டுப்படுத்தி அனாவசிய இடம்பெயர்வுகளை தடுத்து செயற்கையாக ஏற்படும் நெருக்கடிகளை நீக்கவேண்டும். அதற்காக ஊர்கள்தோறும் தொடர்பாளர்களை நியமித்து உடனுக்குடன் செய்திகளையும், அறிவுறுத்தல்களையும் பரிமாறி மக்களை உறுதியாக வைத்திருந்து அவர்களை வழி நடாத்த வேண்டும்.*

** இரத்ததானம் வழங்குவதற்கும், காயமடையும் போராளிகளையும் - மக்களையும் பராமரிப்பதற்கும் ஒரு பராமரிப்பாளர்படை உருவாக்கப்பட வேண்டும்.*

** தேவையான பகுதிகளில் விழிப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்டு எமது போராளி ஒருவரின் தலைமையில் கண்காணிப்புக்கள் நடைபெறவேண்டும்.*

** எல்லாவற்றிற்கும் மேலாக போர் முனையில் காயமடையும் - வீரமரணமடையும் புலிவீரர்களது இடத்தை உடனடியாகவே நிரப்பி சண்டையை வெற்றிகரமாக நடாத்த இளைஞர்களும், இளம் பெண்களும் எமதுபடையில் சேர்ந்து கொள்ளவேண்டும்.*

*எதிரி நினைக்கின்றான், எமது கோட்டைக்குள் புகுந்து அங்கேயே எமக்கு சமாதி கட்டிவிட முடியுமென்று, ஆனால் வாசலில் வைத்தே எதிரியின் அழிவுகளைக்கொண்டே, அரணமைக்க நாங்கள் தயாராக இருப்போம்.*

> **"நாம் சமாதானக் கதவைத் திறந்து விட்டிருக்கின்றோம். ஆனால், சிறீலங்கா அரசு போர் முரசு கொட்டுகின்றது. எம்மை இராணுவ ரீதியாகப் பலமிழக்கச் செய்து-பேச்சுவார்த்தை மேடைக்கு இழுத்து "அரைகுறைத் தீர்வுகளைத்" திணித்து விடலாம் என்பதுதான் அவர்களின் நோக்கம்"**

*அதற்காக ஆண் - பெண் என்ற பேதமின்றி, வயதுவேறுபாடின்றி போர்க்கள வேலைகளில் பங்கெடுத்து எதிரியின் படையெடுப்பை முறியடிப்பதன் மூலம் போராட்டத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தி விடுவோம்.*

***"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"***

**அன்புடன்**

கோ. மகேந்திரராசா.

## குடாநாட்டுக்கு வெளியே பரவலான தாக்குதல்கள்

*தமிழீழ விடுதலைப்புலிகளின் எல்லைக்காவல் படையின் விசேட அதிரடிப்படையினர் வவுனியாவில் மேற்கொண்ட தாக்குதலில் 8 இராணுவத்தினர் காணாமல் போயுள்ளனர். இவ் வெற்றிகரமான தாக்குதலின் போது ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.*

### குச்சவெளியில்

*சாம்பல் தீவை நோக்கி குச்சவெளியில் இருந்து தரை நகர முயன்ற இராணுவத்தினர் மீது இறக்கண்டியில் வைத்து விடுதலைப்புலிகள் வழி மறித்து தாக்குதல் நடாத்தினர். இதில் 3LMG, 4 எறிகணைச் செலுத்திகள், 27 ஏ.கே ரகத் துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டன.*

### மாமடுவில்

*மாமடுவில் பத்தாசிக்குளம் இராணுவக்காவல் அரண் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் 3 படையினர் பலி எனவும் 5 பேர் படுகாயம் அடைந்தனர் எனவும் சிறிலங்கா அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.*

### மட்டக்களப்பில்

*மட்டக்களப்பு நாவற்குடாப் பகுதியிலுள்ள முஸ்லீம் ஊர்காவற் படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஊர்காவல்படையினரின் காவலரண் ஒன்று அழிக்கப்பட்டது. முஸ்லீம் கிராமங்களை ஊடுவிச்சென்று தாக்குதலை வெற்றிகரமாக முடித்த புலிகள் இருளின் ஊடே அவ்விடத்தை விட்டு அகன்று வெற்றிகரமாதத் தம் நிலைகளுக்குத் திரும்பினர்.*

### மன்னாரில்

*மன்னார்ப்பகுதியில் ஆங்காங்கே மோதல்கள் நடைபெறுகின்றன. பல இராணுவத்தினர் புலிகளின் சினைப்பர் கண்ணி வெடிகளில் சிக்கி கால்களை இழந்துள்ளதாக தெரிய வருகிறது.*

*இவ்விதமாக தமிழீழ மெங்கும் புலிகள் பரவலாக மேற்கொள்ளும் தாக்குதல்கள் புலிகள் தமிழீழமெங்கும் செறிந்து காணப்படுவதை ஊர்ஜிதப்படுத்துகின்ற அதேவேளை குடாநாட்டு முற்றுகையால் இலங்கை அரசு தமிழ்த்தேசிய இனப்போரை வெல்லமுடியாது என்பதை உறுதி செய்துள்ளது.*

* "பேச்சுவார்த்தைக்கு நீங்கள் வரலாம். உகந்த ஒழுங்குகளை நாங்கள் செய்வோம்."
தொண்டமானுக்கு புலிகள் கடிதம்

* "இரண்டு, மூன்று மாதங்களில் வடபகுதியை சிங்களப் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவர்."
- சிறிலங்கா முப்படைத் தளபதி கமில்டன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆமி அடிச்ச செல் அதிர்ச்சியிலே பிறந்தவனே! ஆராரோ ஆரிவரோ!

"மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே. . ."
என்றுன்னைச் சீராட்டி
தக்காளிப் பழரசமே தாலாட்டு நான் பாட
இத்தாலி கனடாவில் இருக்கிறார் மாமி மாமா
ஆமி அடிச்சசெல் அதிர்ச்சியிலே பிறந்தவனே
மாமி மாமன் போன தேசம் கேட்கும்வரை கதறியழு

தொப்புள் கொடியோடு தொடர்புகள் அறுத்திங்கே
நிப்புள் பால்பவுடர் விலையறியாய் பிறந்தவனே
ஓடிக்கலோன் பவுடர் கிறேப்வாட்டர் கிறீம் தேடி
ஓடிக்களைத்தேன் நான் ஓயாமல் உனக்காக
காமன் விட்டகணை களிப்பினிலே உதித்தவனே
சாமான் விற்கும் விலை சரியும்வரை கதறியழு

ஊர்விட்டு ஓடுகையில் போர்க்காலச் சூழ்நிலையில்
வேர்விட்டுப் பதித்தவனே பேர்சொல்லப் பிறந்தவனே
அகதியாய் வந்தவேளை அவதியாய்ப் பிறந்தவனே
சகதியில் வந்துதித்த சந்தனமே சர்க்கரையே
நிவாரணமட்டையிலே நின் பெயர் பதியும்வரை
நிர்வாண உடம்போடு நிதமும் நீ கதறியழு

சண்டைத் துவக்குபொம்மை சர்க்கரை இனிப்புவகை
இண்டைக் குமக்குத்தர இலங்கை யரசு தடை
பண்டைத் தமிழ்ப்பாலன் சிங்கக் குட்டிகளின்
சிண்டைப் பிடித்திழுத்து சிரித்து விளையாடினானாம்
உண்மைத் துவக்கோடு விளையாடும் நாள்வரை
தன்மானம் இழந்த தமிழ் மக்களுக்காய் கதறியழு.

- எஸ்.ஜே.பி.ரட்ணதுரை -

( நன்றி:சிரித்திரன்)

## விடியலை நோக்கி, விரைவாய் நடப்போம்.....

இளைய வீரனே!
எழுந்து வா
விடியலை நோக்கி
விரைவாய் நடப்போம்.

வார்த்தை வேதங்கள்
சாத்தானுக்குப் புரிவதில்லை

பெற்றவரின் உடல்களை
பொறுக்கிப் பொறுக்கி
நீ
சிதையிலே இட்டதை
நினைத்துப் பார்...!

படிக்கின்ற பாடங்களில்
பாம்புகள் சீறியதை
நினைத்துப் பார்...!

கழுமலர்கள் போதாதென்று
விழிமலர் பிடுங்கி
விசிறியிலே குத்தி
புத்தபிரானுக்கு
புகழ் வணக்கம் சொன்ன

சாதுக்களின் சண்டித்தனத்தை
நினைவில் இருத்து...!

ஆயிரம் தமிழர்களின்
தலைகளைச் சீவினால்
சொர்க்கம்
கிடைக்குமென்று
புத்தகத்தின் பக்கங்கள்
புலம்புகின்றனவே!

வெள்ளரசு மரங்களின்
விழுந்த சருகுகள் கூட
கொள்ளையிடுவதை
கொள்கையென்று சரசரக்கின்றதே...

தாது கோபுரங்கள்
தனது உச்சிக் குடுமியிலே
உதிர நெய் பூசி
உபதேசம் செய்கின்றனவே...!
சங்கீதம்!

நகரங்களுக்கு
நெருப்பு மழையினால்

தீட்சை வழங்கப்படுகிறது

உலகத்தின் காதுகள்
செவிடாகிப் போயின
போகட்டும்

உன் பார்வையில்
பட்டால் போதும்
படு
நிலை எடு
சுடு! சுடு!

நீளத்தில் கிடக்கும்
நெருஞ்சி முள் கூட
உன்
பாதம் பட்டதும்
பரிசுத்தமடைகிறது.

வேத காலத்தின்
ஹோமோ பறவை நீ

நீ
மண்ணை நேசிப்பவன்
அதனால்
மரணம் வந்தாலும்
நீ மண்ணில் விழுவதில்லை.

வேத காலத்தின்
ஹோமோ பறவை நீ



**விடியலை நோக்கி விரைவாய் நடப்போம்....**

(பொருளாதாரத் தடையை எதிர்த்து மக்கள் ஊர்வலம்)


தமிழீழ விடுதலைப்புலிகள்
பிரித்தானியக் கிளை
54,TAVISTOCK PLACE
LONDON WC1H 9RG
TEL:071 837 7162
FAX:071-278 5666

T.C.C
P.O.BOX 1699 Vika
0110 OSLO - 1
NORWAY
TEL:02 191260
FAX:02 190114

T.C.C
341 Rue Des Pyrenees
75020 PARIS
FRANCE
TEL:435 81142
FAX:435 81191

தமிழீழ விடுதலைப்புலிகள்
ஜேர்மன் கிளை
P.O.BOX 1132
5172 LINNICH
GERMANY

TAMIL CO-ORDINATING COMMITTEE
VIA MARIANO STABILE - 34
90139 PALERMO
ITALY
TEL/FAX: 091-6113179


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்